பக்கங்கள்: 17
விலை: 30.00
THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை
தீ : 01 புனல்:33 11.12.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052



ஆரோக்கிய துவாய்களுக்கான வரி விலக்கு மாதவிடாய் வறுமை ஒழிப்புக்கான அடித்தளமாக அமையும்...
சந்திரமதி போல்ராஜ்
பக்கம் 05



கடவுளப்பா...
வேதநாயகம் தபேந்திரன்
பக்கம் 12

அவதானி



# பாகிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கையர்!

## கண்துடைப்பு மாத்திரம் பரிகாரமா...?



இம்மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாகிஸ்தானில் குரூரமாகக் கொல்லப்பட்ட பிரியந்த குமார (வயது 48) தொடர்பான செய்தி இலங்கை நாடாளுமன்றிலும் ஒலித்திருப்பதுடன், ஊடகங்களிலும் பேசப்படுகிறது.

செய்தி வெளியானதும், இலங்கை அரசும், எதிரணி தரப்பும் கடுமையான கண்டனங்களை வெளிப்படுத்தியிருக்கின்றன. பாகிஸ்தான் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும், இச்சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை நடத்தப்படும் என்று இலங்கை அரசுக்கு உறுதிமொழி அளித்துள்ளனர்.

பாகிஸ்தான் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. அவர்களின் புனிதமான ஒரு நாள்தான் வெள்ளிக்கிழமை. அத்தகைய ஒரு நாளில் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த இலங்கையரான பிரியந்த குமார என்பவர் அடித்தும் எரித்தும் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் இலங்கை பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம்பெற்ற பொறியியலாளர். தொழில் நிமித்தம் அவரைப்போன்று ஆயிரக்கணக்கான ஊழியர்கள் பாகிஸ்தான் உட்பட பல மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றுகின்றனர்.

இவர்கள் தத்தமது குடும்பங்களைத் தாயகத்தில் விட்டு விட்டுச்சென்று, உழைத்துவருபவர்கள். அவர்கள் அனுப்பும் பணத்தை நம்பி வாழும் அக்குடும்பங்கள், குறிப்பாக பெற்றோர், மனைவி மக்கள், கணவன் பிள்ளைகள், தங்கள் குடும்பத்தின் மூல உழைப்பாளிக்கு எப்போது விடுமுறை கிடைக்கும்..? எப்போது நாடு திரும்புவார் ...? என்றே காத்திருப்பார்கள். குடும்பத்திற்காக உழைக்கச்சென்ற குடும்பத் தலைவியும் தலைவனும் கூட தாயகம்வரும் நாளுக்காக பல கனவுகளைச் சுமந்தவாறு காத்திருப்பர்.

இந்நிலையில், பணிக்குச்சென்றவிடத்தில் உயிரிழந்து சடலமாகவோ, உடல்பாகங்களாகவோ திரும்ப நேர்ந்தால், அதன் வலியைத் தாங்குவது சுலபமல்ல. அந்த இழப்பின் துயரத்தைக் கடந்து செல்வதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

பாகிஸ்தானில், சியால்கோட் நகரில் ஒரு தொழிலகத்தில் மேலாளராகப் பணியாற்றிவந்திருக்கும் பிரியந்த குமார, மதம் சார்ந்த சுவரொட்டிகளைக் கிழித்து அகற்றினார் என்பதற்காக அதனால் உணர்ச்சிவசப்பட்டு வெகுண்ட பலர், அவரை அடித்தும் எரித்தும் கொன்றிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அதனை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டு, இந்தத் தாக்குதல் கொலைச் சம்பவத்தையும் இஸ்லாமிய பயங்கரவாதம் என்றும் ஞானசார தேரர் முதலான கடும்போக்காளர்கள் கருத்து வெளியிடத் தொடங்கிவிட்டனர்.

இதேவேளை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச, சம்பவம் பற்றி அறிந்ததும், பிரியந்த குமாரவின் வீட்டுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் உட்பட அரச தரப்பு, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இச்சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இக்கொலைச்சம்பவம் தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டோர் அங்கே விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

▶15





# இந்திய–ரஷ்ய மூலோபாய நட்புறவை மீள உறுதி செய்கிறதா புடின்–மோடி சந்திப்பு?

ஐ.வி.மகாசேனன்

கோவிட்-19 பெருந்தொற்று நெருக்கடிகளுக்குள் பழகி உலகம் ஓரளவு வழமையான இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்துள்ளது. சர்வதேச அரசியல் பரப்பிலும் இயல்பு நிலை உருவாக்கங்களை அவதானிக்க முடிகிறது. கடந்த ஒரு வருடகாலமாகக் காணொளி வடிவில் பதிவு செய்யப்பட்டு அல்லது நேரலையாக மெய்நிகர் வழியில் சந்திப்புக்களை மேற்கொண்டு வந்த அரசியல் தலைவர்கள் மீளவும் நேரடியான சந்திப்புக்களுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். எனினும் நேரடியான சந்திப்புக்கள் அதிகம் நெருக்கமான உறவுகளை பகிரும் நாடுகளிடையே முன்னிலைப்படுகின்றது. மாறாக, பதற்றமான உறவு தொடரும் நாடுகளிடையே தொடர்ச்சியாக மெய்நிகர் வழியிலான சந்திப்புகளிற்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இந்தியப் பிரதமர் சந்திப்பை அடுத்து டிசம்பர்- 8 ஆம் திகதி கிரீஸ் பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸையும் நேரடியாகச் சந்தித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் டிசம்பர்-07ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை மெய்நிகர் முறையில் சந்தித்துள்ளார். இக்கட்டுரை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோரிடையிலான நேரடி சந்திப்பின் பின்னாலான உலக அரசியலை தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

இந்திய-ரஷ்ய உறவானது சித்தாந்தங்களை கடந்த நீண்ட வரலாற்று பாரம்பரியங்களைக் கொண்டதும் தந்திரோபாயமான உறவாகவும் காணப்படுகிறது. சித்தாந்த ரீதியில் ரஷ்யா மற்றும் சீனா நெருக்கமான உறவைப் பகிரும் நாடுகளாகும். அதேவேளை பனிப்போருக்குப் பின்பான ஒற்றைமைய அரசியலிலும் குறிப்பாக சமீபத்திய பூகோள அரசியலில் அமெரிக்கா மற்றும் இந்தியா நெருங்கிய மூலோபாய பங்காளிகளாக உள்ளனர். மாறாக சீன-இந்திய உறவும், அமெரிக்க-ரஷ்ய உறவும் அதிகம் பகைமைகளைப் பகிருகின்றன. இக் குழப்பமான தொடரிலேயே இந்தியா,ரஷ்யா நாடுகளின் தலைவர்களுக்கிடையிலான 21 ஆவது மாநாடு கடந்த டிசம்பர்-06ஆம் திகதி இந்தியாவில் இடம்பெற்றது. உலக நாடுகளின் தலைவர்கள் பரந்துபட்ட அளவில் கலந்து கொண்ட ஜி-20 மாநாடு மற்றும் கிளாஸ்கோ மாநாடுகளில் நேரடிப் பிரசன்னத்தை தவிர்த்துக்கொண்ட புடின், கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னரான தனது இரண்டாவது வெளிநாட்டு பயணமாக இந்தியாவை வகுத்துள்ளமை இந்திய-ரஷ்யா உறவின் மூலோபாய கூட்டாண்மையின் முக்கியத்துவத்தையே உறுதி செய்கிறது. மேலும் இரு நாட்டு தலைவர்களின் சந்திப்புக்கு முதல் நாள் டிசம்பர்-05 ஆம் திகதி இருநாட்டு வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான சந்திப்பும் இந்தியாவில் நடைபெற்றுள்ளது. ரஷ்சிய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவுடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்யும் '2+2' பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள்.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னராக இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் அபரிமித எழுச்சி மற்றும் இந்து சமுத்திரத்தை மையப்படுத்தி எழுந்துள்ள பூகோள அரசியல் போட்டியில் உலகம் பல அடிப்படை மாற்றங்களைக் கண்டு வருகின்றது மற்றும் பல்வேறு வகையான புவிசார் அரசியல் சமன்பாடுகள் தோன்றுகின்றது. இத்தகு மாற்றத்துக்கான சூழலில் நீண்டகால மூலோபாய கூட்டாண்மை கொண்டுள்ள இந்திய-ரஷ்ய நாடுகளுக்கிடையிலான மாநாட்டில் உரையாடப்பட்ட விடயங்களை அவதானித்தல் அவசியமாகும்.

ஒன்று, அமெரிக்க-இந்திய நெருக்கம் இந்திய-ரஷ்ய உறவின் அச்சுறுத்தல் என்ற எண்ணங்களைச் சிதைத் துள்ளது. இரு நாட்டு தலைவர்களும் தங்களது கூட்டாண்மை முக்கியத்துவம் தொடர்பில் சரியான புரிதலுடன் உள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள். புடின்-மோடி சந்திப்பில் மோடி தமது நாடுகளுக்கிடையிலான உறவை விளிக்கையில், "எங்கள் இரு நாடுகளும் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளன. நாங்கள் ஒத்துழைப்பது மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் உணர்திறனையும் மனதில் வைத்துள்ளோம்" என்று தெரிவித்துள்ளார். அவ்வாறே புடின், "இந்தியாவை ஒரு பெரிய சக்தியாகவும், நட்பு தேசமாகவும், காலத்தால் சோதிக்கப்பட்ட நண்பராகவும் நாங்கள் உணர்கிறோம். நமது நாடுகளுக்கிடையேயான உறவுகள் வளர்ந்து வருகின்றன. நான் எதிர்காலத்தைப் பார்க்கிறேன்." என நட்புப்பாராட்டியுள்ளார்.

> **ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா இராணுவம் வெளியேறிய தன் பின்னர் ஆப்கானிஸ்தானில் எழுச்சியுற்றுள்ள தலிபான்களின் ஆட்சியை முதலில் அங்கீகரித்த தேசங்களில் ஒன்றாக ரஷ்சியா காணப்படுகின்றது. எனினும் இஸ்லாமிய அடிப்படைவாத தலிபான்களின் ஆட்சி தொடர்பில் இந்துத்துவ அடிப்படைவாத ஆட்சி புரியும் இந்தியாவின் பாரதீய ஜனதா அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது.**

இரண்டு, ரஷ்யாவுடன் இந்தியா மேற்கொண்டுள்ள எஸ்-400 ஏவுகணைகள் கொள்முதல் மீதான அமெரிக்க பொருளாதாரத் தடைகள் அச்சுறுத்தலுக்கு இந்தியா தனது எதிர்வினையை வெளிப்படுத்தியுள்ளது. எஸ்-400 குறித்து, இந்திய வெளியுறவுச் செயலாளர், "எஸ்-400 என்பது 2018 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஒரு மரபு ஒப்பந்தமாகும். அது தொடர்பான விநியோகங்கள் தொடங்கியுள்ளன. அது தொடர்ந்து நடக்கும். நாங்கள் ஒரு சுதந்திரமான வெளியுறவுக் கொள்கையைப் பின்பற்றுகிறோம், மற்றவர்களின் வெளிச்சத்தில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை." எனத்தெரிவித்துள்ளார். அவ்வாறே ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் செய்தியாளர் சந்திப்பில், "எஸ்-400 வெறும் குறியீட்டு அர்த்தத்தைக் கொண்டிருக்கவில்லை. இது இந்திய பாதுகாப்புத் திறனுக்கு முக்கியமான நடைமுறை அர்த்தத்தைக் கொண்டுள்ளது. நிலைமை அடிப்படையில் நடந்து கொண்டிருக்கிறது. ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்டு வருகிறது." எனக் குறிப்பிட்டுள்ளார். ரஷ்சியா, எஸ்-400 ஏவுகணை ஒப்பந்தம் மீதான அமெரிக்காவின் தலையீட்டை இந்தியா நலனை சுட்டிக்காட்டி கண்டனம் செய்துள்ளமையானது இராஜதந்திர வெளிப்பாடாக அமைகிறது.

மூன்று, சீன-ரஷ்ய உறவு தொடர்பில் அமெரிக்க தரப்பால் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட எச்சரிக்கை பிரச்சாரங்களை இருநாட்டுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவம் மற்றும் இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் தகர்த்துள்ளது. இது தொடர்ச்சியாக இந்தியாவின் பாதுகாப்பு துறையின் ஆக்கபூர்வமான பங்காளி நாடு ரஷ்யா என்பது மீளவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்புக்குச் சமாந்தரமாக இருநாட்டு வெளியுறவுத்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான சந்திப்பும் (டிசம்பர்-06) நடைபெற்றது. பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையின் முடிவில், உத்தர பிரதேச மாநிலம் அமேதியில் உள்ள ஒரு தயாரிப்பு ஆலையில் 6 இலட்சத்துக்கும் அதிகமான ஏகே-47 ரக துப்பாக்கிகளை கூட்டு தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் கையெழுத்திட்டனர். சுமார் 5,000 கோடி ரூபாய் செலவில் இந்திய இராணுவத்தினருக்காக துப்பாக்கிகள் தயாரிக்கப்படும். இராணுவம் மற்றும் இராணுவ தொழின்நுட்ப ஒத்துழைப்புக்கான இந்திய-ரஷ்ய இடையேயான அரசு ஆணையத்தின் (IRIGC-M&MTC) 20 ஆவது கூட்டத்தில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

நான்கு, ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா இராணுவம் வெளியேறியதன் பின்னர் ஆப்கானிஸ்தானில் எழுச்சியுற்றுள்ள தலிபான்களின் ஆட்சியை முதலில் அங்கீகரித்த தேசங்களில் ஒன்றாக ரஷ்யா காணப்படுகின்றது. எனினும் இஸ்லாமிய அடிப்படைவாத தலிபான்களின் ஆட்சி தொடர்பில் இந்துத்துவ அடிப்படைவாத ஆட்சி புரியும் இந்தியாவின் பாரதீய ஜனதா அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது. இந்நிலையில் இவ்விடயம் புடின்-மோடி சந்திப்பில் முதன்மை பெற்றுக்காணப்பட்டது.



ஆப்கானிஸ்தானில் உருவாகி வரும் சூழ்நிலை, குறிப்பாக பாதுகாப்பு நிலைமை மற்றும் பிராந்தியத்தில் அதன் தாக்கங்கள், தற்போதைய அரசியல் சூழ்நிலை, பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் தொடர்

(15 ஆம் பக்கம் பார்க்க...)

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# உரிமைகளை நிலைநாட்டும் நாள் சர்வதேச மனித உரிமைகள் தினம்

உலகின் வாழும் மக்களில் பலரும் சில நாட்களை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். பிறந்தநாள், திருமணநாள் என்பனவற்றைக் கொண்டாடும்போது உவகை ஏற்படுகிறது. உலகின் விழிப்புணர்வுக்காக சர்வதேச அமைப்புகள் சிலவற்றை தேர்ந்தெடுத்துள்ளனர். டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம். இந்தத் தினம் அறிவிக்கப்பட்டபோது இலங்கையில் உள்ளவர்கள் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

சகல வளமும் உள்ள நாட்டில் வாழ்பவர்களுக்கு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு பெரிதாகத் தேவைப்படுவதில்லை.

1945 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு, மாசி மாதம் 16 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் ‘மனித உரிமை ஆணைக் குழு’ உதயமானது. 53 நாடுகளை அங்கமாகக் கொண்ட இக் குழு, முதல் வேலையாக ‘அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு சர்வதே மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு, டிசம்பர் 10 ஆம் திகதி பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியது. டிசம்பர் 10 என்ற இதே நாளை 1950 ஆம் ஆண்டிலிருந்து ‘அனைத்துலக மனித உரிமைகள் நாளாக’ அறிவித்து கொண்டாடப்பட்டு வருகிறது. உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையை இக்காலப் பகுதியில் சர்வதேசம் உரத்து குரல் எழுப்பவேண்டிய நிலையிருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக மறைமுக தாக்குதல் ஆரம்பனான போது மனித உரிமை பற்றிய குரல் மெதுவாக ஒலிக்கத் தொடங்கியது. கைது செய்தல், காணாமல் போதல், கடத்தப்படுதல் ஆகியனவற்றால் மனித உரிமை பற்றிய குரல் சத்தமாக ஒலிக்கத்தொடங்கியது. நாள் செல்லச் செல்ல மனித உரிமைக்கான குரல் அழுகையாக கலங்கடிக்க வைக்கிறது.

ஜே.வி.பி புரட்சியை கிளர்ச்சி என்கிறார்கள். தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதம் என்கிறார்கள். அவர்களுக்கு பொது மன்னிப்பு. தமிழர்களுக்கு மன்னிப்பு இல்லை. இதுமனித உரிமை மீறலுக்குள் அடங்காது என்பது இங்குள்ள சிலரின் வாதம். காணாமலாக்கப்பட்டவர்களின் நிலை, யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கான நீதி என்பன இன்னமும் கணக்கில் எடுக்கப்படாமல் உள்ளன. ஒரு மனிதனின் உரிமை பாதிக்கப்படும் போதே உரத்துக் குரல் கொடுக்கக்கப்பட வேண்டும். இங்கு ஒரு சமூகம் துவண்டு போயிருக்கையில் உலகம் பெரிதாகக் குரல் கொடுக்கவில்லை.

பாதிக்கப்பட்டவனுக்கு பரிகாரம் கொடுக்காமல் அடக்கு முறையை ஏவியவர்களிடம் நீதி கோரி விண்ணப்பம் செய்கின்றன உலக நாடுகள்.

உலகில் பிரக்கும் எல்லா உயிருக்கும் வாழ்வதற்குரிய வழியை இயற்கை ஏற்படுத்தியுள்ளது. பேராசை பிடித்த மனிதர்களால் உரிமைகள் மறுக்கப்படும் போது அதற்கெதிராக தனித் தனியாக ஒலித்த மனித உரிமைக்கான குரல் இன்று உலகின் ஒட்டுமொத்தக் குரலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

தந்தையும், தாயும் கூடிக் குலாவி வாழ்ந்த நிலப் பரப்புகளில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்கள் தமது நிலத்தை மீட்க போராட வேண்டிய நிலை உள்ளது. இறந்த உறவுகளை நினைத்து அஞ்சலி செய்ய முடியாத நிலை உள்ளது. தமிழப் பகுதிக்கு ஒரு நீதி, சிங்களப் பகுதிக்கு ஒரு நீதி. தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது உலக நாடுகள் உரத்துக் குரல் கொடுக்கின்றன. அந்தக் குரலுக்குள்ளும் அந்த நாடுகளின் அரசியல் கலந்துள்ளது.

மனித உரிமைகள் பல சரத்துக்களால் உருவாக்கப்பட்டன. உலகின் பல நாடுகள் அவற்றுக்கு மதிப்பளிப்பது இல்லை. மனிதனின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் தினம்வெறும் சம்பிரதயமாகவோ அல்லது சடங்காகவோ இருக்கக்கூடாது. மனித உரிமைகள் மீறும் நாடுகளுக்கு எதிராக உலக நாடுகள் அணிதிரள வேண்டும் அப்படியான ஒரு நிலையில் உலக நாடுகள் இல்லை.

சமூக ஆர்வலர்களும், மனித உரிமை ஆர்வலர்களும் மனித உரிமைக்காகப் போராடி வருகின்றனர். உலகில் உள்ள பல அரசியல் தலைவர்கள் மனித உரிமை பற்றி பேசிவிட்டு அல்லது அறிக்கையை வெளியிட்டவிட்டு தமது அடுத்தகட்ட அரசியல் சதுரங்கத்துக்குள் சென்று விடுகின்றனர்.

மனித உரிமைகள் வெறும் காகிதத்தில் இல்லாது நடை முறைப்படுத்கப்படும்போதுதான் மனிதனின் உரிமைகள் நிலை நிறுத்தப்படும் சூழ்நிலை ஏற்படும். ■

---



# இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகரின் தமிழக விஜயம் சொல்லும் செய்தி

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே உயர் ஸ்தானி கராலய உயரதிகாரிகள் இருவர் சகிதம் கடந்த நவம்பர் மாதம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கான விஜய மொன்றை மேற்கொண்டிருந்தார். இந்தச் செய்தி அதிகம் பேசப்படவில்லை.

முதல் நாள் விஜயத்தின்போது இராமேஸ்வரம் கரையோர நகரப்பகுதிகளுக்குச் சென்றிருந்த உயர் ஸ்தானிகர், இந்திய மீனவர்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் குறித்து உள்ளூர் மீனவ சமூகங்களுடன் கலந்துரையாடினார். அம்மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடிக்காக அபிவிருத்திசெய்யப்பட்டுள்ள உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகள் குறித்து தமிழக அதிகாரிகள் உயர் ஸ்தானிகருக்கு விளக்கமளித்திருந்தனர். இந்திய - இலங்கை மக்களிடையிலான உறவுகளுக்கு வழிகோலிய தனுஷ்கோடி பழைய துறைமுகத்துக்கும் உயர் ஸ்தானிகர் விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள இலங்கை புனர்வாழ்வு முகாமுக்குச் சென்ற உயர் ஸ்தானிகர் அங்கு தங்கியுள்ள இலங்கை அகதிகளுடன் உரையாடினார்.

தென்னிந்திய தொழில் வர்த்தக சபையால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வர்த்தக மற்றும் முதலீட்டு நிகழ்வொன்றில் தமிழகத்தைச்சேர்ந்த வர்த்தக சமூகத்துடன், இலங்கையில் இந்திய வணிகத்துறைக்குக் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் வர்த்தக மேம்பாட்டுக்கான நெருக்கமான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து உயர் ஸ்தானிகர் கலந்துரையாடினார்.

தமிழக ஆளுநர் என்.ரவியை உயர் ஸ்தானிகர் மரியாதையின் நிமித்தம் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினையும் உயர் ஸ்தானிகர் சந்தித்தார். இந்திய- இலங்கை மக்களிடையிலான உறவுகள் தொடர்பான முக்கிய விடயங்களை தமிழக முதலமைச்சருக்கும் தமிழகத்தின் சிரேஸ்ட அதிகாரிகளுக்கும் உயர் ஸ்தானிகர் எடுத்துக் கூறினார்.

தமிழகத்தின் மீன்பிடி, மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டாக்டர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோரையும் உயர் ஸ்தானிகர் சென்னையில் சந்தித்திருந்தார்.

புதுச்சேரியில் துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை செளந்தரராஜன் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் என்.ரங்கசாமி ஆகியோரை சந்தித்த உயர் ஸ்தானிகர் ஒன்றிய பிரதேசத்தின் ஏனைய சிரேஸ்ட அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய முக்கிய தரப்பினருடனான ஆக்கபூர்வமான சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவ சங்கங்களுக்கு இடையிலான சந்திப்புக்கள் மற்றும் மீன்பிடி குறித்த இந்திய - இலங்கை கூட்டு செயற்குழு அமர்வு ஆகியவற்றை முற்கூட்டியே நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. அத்துடன் இலங்கையின் பல்வேறு துறைமுகங்களில், இயக்கமுடியாத நிலையில் உள்ள இந்திய மீன்பிடி படகுகளை ஏலம் விடுவது தொடர்பான வாய்ப்புக்கள் குறித்து தீர்மானிப்பதற்காக தமிழகத்தைச் சேர்ந்த குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் உயர் ஸ்தானிகரிடம் கூறப்பட்டது.

வணிகம், வர்த்தகம், தொடர்பாடல், சுற்றுலா உள்ளிட்ட துறைகளிலும் குறிப்பாக விவசாயம், இயற்கை வேளாண்மை, மீன்வளம், மீன்வளர்ப்பு, உணவு பதப்படுத்துதல், பசுமை மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி, கப்பல் மற்றும் துறைமுகங்கள், மருத்துவ சுற்றுலா மற்றும் கலாசார பரிமாற்றம் சார்ந்த துறைகளிலான ஒத்துழைப்பு உள்ளிட்ட இந்திய மற்றும் இலங்கை மக்களின் முக்கியத்துவம் வாய்ந்த பல அம்சங்களைப் பற்றிய கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளின் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி விஜயம் பயனுள்ள வாய்ப்புக்களை வழங்கியது. ■



# என்ன உலகமடா பரமானந்தா? 33

தமிழ்க்கவி

சுக் என்ன மனிசரப்பா ஒரு அக்கறை அவசரம் விளங்காத சனம். ச்சைக் பத்து மணிக்கு வாவெண்டா பத்தரையாகுது இன்னும் வாறானோ பார். எல்லாம் காசிருக்கெண்ட பவர். ம்.. உதைத்தான்ரா சொல்லுறது "உள்ளவன் பெட்டி திறக்க முன்னம் இல்லாதவனுக்கு பிள்ளை செத்துப் போம்" எண்டு. அவங்கள் எங்கடா, காத்தால வேலைக்கு வந்த கையோட போனவன் இந்தா வேலை முடிச்சிட்டும் வந்திட்டன் இனி காவல் நில்லன். முதலாளி வந்து பெட்டி திறக்குமட்டும். எட நேற்றைக்கு வேலை செய்த காயப்பா. வேலேய்ய ஒருநாள் கூலி வாங்க ஒருநாள்.

கூலி வேலேய்யிறவனை மதிக்க மனமில்லை. சும்மா எங்கனக்கையும் கண்டாலும் லேசா தலை அசைப்பங்களெண்டோ. சும்மா விடு ஏடேய் எங்களுக்கென்னடா வெள்ள அழிவோ வரட்சியால பாதிப்போ இல்ல பயிரப்பத்தி, யாவாரத்தப்பத்தி ஏதுங் கவலையோ எதுகும் இல்ல. என்ன போல்முழுக்க அவங்கட காணியளுக்கு குண்டிய நட்டுக் கொண்டு வேலேய்தாலும் பொழுது படக் கூலிய வாங்கிக் கொணந்தா உலை கொதிக்குது. ங்னா பணம் பணமிருந்தா அவைக்கு நாங்கள் பயமே. சும்மா விடுறா. 'பணமிருந்தா அவன் பெட்டியில அழகிருந்தா அவன் மூஞ்சியில' எங்கள என்ன செய்யப் போகுது.

இல்ல தெரியாமத்தான் கேக்கிறன். உவர் செல்லையாக் கமக்காறன்ர வயல்ல எப்பவும் வேலைக்குப் போயிருக்கிறியே... எட பாழ்படுவான் நூறு ஏக்கரளவில பரந்த வயல்வெளியில பெண்டுகள் புல்லுப் பிடுங்க பிறகாலயே நிப்பான் பாவி. ஆத்திரம் அந்தரமெண்டு புத்துவாட்டிக்குப் பின்னால ஒதுங்கப் போறியா...' 'எங்கயடி அங்க போறாய்' என்பான். அவனுக்கு எங்கட ராசம்மாக்கிழவிதான் தோது. மனிசி மூத்திரத்தை அடக்கமாட்டாம பள்ளவயலுக்கால மாற, 'எங்கணை போறாய்' எண்டு குரல் வச்சாரோ? மனிசி திரும்பி பாத்திட்டு ஒரு சொல்லு சொல்லிச்சு. ஹிஹி... என்னணையோ? 'சாரத்த அவிட்டு பரத்திறியே நான் அதுக்க ஒதுங்கிறன்' எண்டு.

பெண்பிரசுகள் வேலை செய்யிற இடத்தில எங்கபார் இந்த துலைவாற்ற பார்வை இருக்கத்தான் செய்யிது. பின்ன இப்பதான் ஏதோ கடைவழிய கம்பனி வழிய பொம்பிளைப்பிள்ளையள் வேலைக்குப் போகுதுகள். மரியாதையாப் போய் வருதுகளாம். என்ர பேத்தியும் போறாள்தான். எடேய் நான் நானாத்தான் இருக்கிறன் கண்டியோ 'சித்திரை எண்டு சிறுக்கவும் இல்லை பங்குனி எண்டு பருக்கவும் இல்லை' எண்டைக்கும் ஒரே மாதிரித்தான். இந்தப் பொம்பிளப் பிள்ளையளுக்கு ஆமான உரிமையள வச்சிருக்கினமோ பார், கிடையாது அந்த விசியத்தில எங்கட கமம் வழிய வேலை செய்யிறவையப்போல அவைக்கு ஒதுங்க இடம் இருக்கோ நூத்துக்கு தொண்ணூறு இடத்தில இல்லை. அங்கயெல்லாம் மலசலகூடத்திலதான் சமத்துவம் பேணுறாங்களடா. எங்கட காலத்தில ஒரு சட்டமிருந்தது கண்டியோ ஆம்பிளையளும் பொம்பிளையளும் ஒண்டா வேலேய்யிற இடங்கள்ள ஒத்தையா ஒரு பொம்பிளப்பிள்ளைய வேலைக்கு வச்சிருக்கக் கூடாதெண்டு. ரெண்டு பேராத்தான் வச்சிருக்கோணும். இரு இரு உந்த தொளாயிரத்து தொண்ணூத் தொம்பது கடை கண்ணியளிலயும் கடைக்காரியத்தவிர முப்பத்தைஞ்சு வயதுக்கு மேல உள்ள வேலையாக்கள் இருக்கினமோ... அதென்னமோ தெரியாதெடா இளம் பெடிச்சியள்தான நிக்குதுகள். அதிலயும் அவளுகளின்ர கழுத்தில கொடியேறிச்சோ வேலை அவ்வளவுந்தான். அங்கால சேராங்கள். அல்லது வாற புரியன் விடான். ஹஹ பாம்பின் கால் பாம்புக்குத்தானே தெரியும். அதோடயெடா கலியாணஞ் செய்த பெடிச்சியள் இக்கணம் வாயில வயித்தில வந்திட்டா அந்த லீவு இந்த லீவெண்டு இருத்தி வச்சு சம்பளங் குடுக்க ஓமாமே.

> எடேய் நான் நானாத்தான் இருக்கிறன் கண்டியோ 'சித்திரை எண்டு சிறுக்கவும் இல்லை பங்குனி எண்டு பருக்கவும் இல்லை' எண்டைக்கும் ஒரே மாதிரித் தான். இந்தப் பொம்பிளப் பிள்ளையளுக்கு ஆமான உரிமையள வச்சிருக்கினமோபார். கிடையாது அந்த விசியத்தில எங்கட கமம் வழிய வேலை செய்யிறவையப்போல அவைக்கு ஒதுங்க இடம் இருக்கோ நூத்துக்கு தொண்ணூறு இடத்தில இல்லை. அங்கயெல்லாம் மலசல கூடத்திலதான் சமத்துவம் பேணுறாங்களடா. எங்கட காலத்தில ஒரு சட்டமிருந்தது கண்டியோ ஆம்பிளையளும் பொம்பிளையளும் ஒண்டா வேலேய்யிற இடங்கள்ள ஒத்தையா ஒரு பொம்பிளப்பிள்ளைய வேலைக்கு வச்சிருக்கக் கூடாதெண்டு. ரெண்டு பேராத் தான் வச்சிருக்கோணும்.

நான் ஒருத்தி என்னமோ கதைக்க வந்து எதையோ கதைச்சுக் கொண்டு... மெய்யேடா உவன் பெருமாளின்ர பெடியன எங்கயும் கண்டநீயே கண்டா நான் தேடினதாம் எண்டொருக்காச் சொல்லு. இல்ல அவன் ஒரு சீட்டுக்கட்டுறானாம் என்னையும் கூடட்டாம் எண்டு கேட்டவன். கட்டுவமெண்டுதான். என்னடா வேங்கோ... எந்த வேங்கிலயடா லாவமில்லாம காயு சேர்க்கிறான்.

முன்ன சண்டை நடந்த நேரம் என்ர பேத்தி, நான் கைச்சிலவுக்கு குடுத்த காசைக் கொண்டே வேங்கில போட்டுச் சேத்திருக்கிறாளடா. செத்திட்டாளோ இருக்கிறாளோ எதுகுந் தெரியா. இப்ப அந்தக்காசெல்லாம் வேங்குக்குத்தானாம். அவள்பாவி ஏதேன் வாங்கித் தின்னடி எண்டு குடுத்ததை தின்னாம சேத்து அவங்களுக்கு வாய்க்கட்டை போட்டிட்டாளடா? அது போச்சா நானுங் கிடக்கமாட்டாம அந்த முதலீட்டுக்கு சேர்க்கிற காசில முப்பத்தாறு மாயம் கட்டினனா... விசர் கதையக் கேள் இருவது மாசத்தில அந்தக்காசில மூண்டு தங்கப்பவுண் வாங்கியிருக்கலாமடா... அது முத்தி நான் எடுக்க அதான் முப்பத்தாறு மாயம் கழிச்சு நான் எடுக்கயுக்க ரெண்டு பவுணுக்கும் காணாதடா.

இப்பயுங்கூலிக்குப் போறனெண்டா தேவைக்குத்தானெண்டில்லடா, 'நாண்டு கொண்டு சாகிலும் தன்தன் கையில கயிறு இருக்கோணுமடா.' எடேய் பெத்த பிள்ளையெண்டாலும் கையில மடியில இல்லையெண்டா, கடனுக்கெண்டுதான்ரா பாக்குங்கள். பங்க யோகராணியப் பாக்கேல்லயே எனக்கும் அவளுக்கும் ஒரே வயசுதானே அவளப்பார் தொஞ்சு துவண்டு ஒரு வேலக்காரியப் போல பிள்ளையளப்பாத்து பிள்ளையளின்ர பிள்ளையளப்பாத்து சமைச்சு வீடுவாசலக் கூட்டிப் பெருக்கி,... பாத்தாலும் காக்காசுக்கு மதிக்கிறாங்களே எண்டைக்கும் அடிப்பானைச் சோறுதான்ரா. மிஞ்சினா சரி மிஞ்சாட்டி தேத்தண்ணிய குடிச்சிட்டு அடுத்த வேளைக்கு உலை வைக்கோணும். உதென்ன சீவியமெடா... மனிசிக்கு புரியன்காறன் என்ன குறை வச்சவன். காணி பூமியெல்லாம் அவளின்ர பேருக்குத்தானே எழுதிட்டு செத்தவன். பிள்ளைப்பாயம் மக்களுக்கு கைநாட்டப்போட்டுக் குடுத்திட்டு இப்ப அழுந்துது. பெண்டுகளுக்கு எத்தின வகையில ஊருலகம் வலைவிரிச்சு வச்சிருக்கு கண்டியோ.

சும்மா பொம்பிளையளுக்கு என்ன குறையெண்டு கேக்கிறவைக்கு தெரியுமே, எத்தினை கொடுவினையளுக்கு அதுகளின்ர சீவியம் போகுதெண்டு. கூலிவேலைக்கு போனாலும் கயிட்டந்தான். கந்தோர் வேலைக்குப் போனாலுங் கயிட்டந்தான். எல்லாத்தையும் முடிச்சிட்டு வீட்ட வந்தாலுங் கயிட்டந்தான். ஒரு நினைச்சத வாங்கவோ உடுத்தவோ இல்ல செய்து தின்னவோ ஏலுதே. முன்னை ஒருநாள் என்ர சின்னவன் உழவு தறைக்க வெங்காயந் நட பாத்தி கட்டிக் கொண்டிருக்க வந்தான். "உதை விட்டிட்டு வாணை" எண்டு கூப்பிட்டு கேட்டான் "எங்கள வளக்க உவள கஸ்டப்படுறியே உனக்கென்ன ஆசையிருக்கு" எண்டு. எனக்கு சிரிப்பாக் கிடந்திது. 'ஏன்ரா அப்பிடி கேக்கிறாய்' எண்டன். 'நான் வளந்தாப்பிறகு உன்ர ஆசையெல்லாம் நிறைவேத்த வேணும்' எண்டான் அவனுக்கு அப்ப பத்து வயசுதான் கட்டிப்பிடிச்சு கொஞ்சினன். பொம்பிளையளுக்கு என்ன வேணும். புடவை நகை சொத்து சுகம் எண்டு தானே நெக்கிறியள். உங்கட எண்ணத்தில இடிவிழ. எந்த பொம்பிளையும் தாயா இருந்தா தன்ர பிள்ளையள் நல்லா இருக்கோணும் எண்டுதான் நினைப்பாள். அதுக்காண்டித்தான் உழைப்பாள்.

அநேகமான பொம்பிளையள் பாடசாலை ரீச்சரோ, வேற தொழில் செய்யிறவையோ காலைச்சாப்பாட்டை வேலேய்யிற இடத்துக்கு வந்துதான் தேத்தண்ணி இடைவேளையில சாப்பிடுகினம். காலம எல்லாரும் சாப்பிடக்க அவளுக்கு சாப்பிட நேரமிருக்காது. சில நேரங்கள்ள வயித்துப்பசிய மட்டும் அவள் அடக்கி வேலேய்யிறாள் எண்ட கதையோட இதையுஞ் சேருங்கோ. வயித்துப் பசி மட்டுமில்ல இயற்கை உபாதையளக்கூட அடக்கி வச்சிருந்துதான் ஆக வேணும். பொண்டுகள் வேலையால வீட்ட வந்த உடன முதல் ஓடுற இடம் கழிப்பறைதான் எண்டதை எத்தினை பேர் கவனிச்சிருக்கிறியள்.

■

# ஆரோக்கிய துவாய்களுக்கான வரி விலக்கு மாதவிடாய் வறுமை ஒழிப்புக்கான அடித்தளமாக அமையும்...

**“பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஹரினி அமரசூரிய உரையை முடித்ததன் பின்னர் பாராளுமன்ற ஒய்வறையில் உள்ள ஆரோக்கியத் துவாய்களை அப்புறப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடத்தைப் புகைப்படம் எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். குறித்த புகைப்படத்துடன் “பாராளுமன்றத்தில் கூட ஆரோக்கியத் துவாய்களை அப்புறப்படுத்தும் செயற்பாட்டை ஒழுங்காக செய்துகொள்ள முடியாத நிலையில், நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்று எனது உரையில் தெரிவித்திருந்தேன். அதே நேரம் பாராளுமன்றத்தில் இருக்கும் எங்களைப் போலவே மாதவிடாய் வறுமையை எதிர்கொள்ளும் இலங்கை மக்களுக்கு பொறுப்புக் கூறுபவர்களாக அரசாங்கம் இருக்க வேண்டும்” என குறிப்பிட்டிருந்தார்.”**

சந்திரமதி போல்ராஜ்
நான்காம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.





இச் சமூகத்தில் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அவற்றில் உடல் சார்ந்த பிரச்சினையாக மாதவிடாயால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் குறிப்பிடலாம். இன்றைய 21 ஆம் நூற்றாண்டிலும் மாதவிடாய் பற்றிய தெளிவின்மையும் , மூட நம்பிக்கைகளும் காணப்படத்தான் செய்கின்றன.

பெண்களின் உடல் மறு  உற்பத்தியிற்குத் தயார் நிலையை அடையும்போது மாதவிடாய் தொடங்குகிறது. அதாவது, சூலகம் விருத்தியடைந்து முதலில் முட்டை வெளிவரும். இம் முட்டை விந்துடன் சேர்ந்து கருக்கட்டல் நிகழ்ந்தால் முளையம் உருவாகிறது. இந்த முளையம் பதிவதற்கு ஏற்றவாறு கருப்பை சுவர் தயாராவதும் பின்னர் கருக்கட்டல் நிகழாமையினால் அவை உடைந்து இரத்தமும், இழையங்களுமாக வெளியேறுவதே மாதவிடாய் என்று அழைக்கப்படுகிறது.

இங்கு வெளியேறும் இரத்தம் சாதாரண வெட்டுக்காயம் ஏற்படும்போது வெளிவரும் இரத்தத்தினை ஒத்ததாகவே இருக்கும். இதில் எந்தவித கிருமியோ அழுக்கோ இல்லை. ஆனால் எமது சமூகம் இதனை அசுத்தம், தீட்டு, கழிவு என கற்பிதம் செய்து கொள்கிறது. உண்மையில் இந்த கருப்பைச்சுவர் முளையம் பதிவதற்குத் தேவையான தளத்தை வழங்குகிறது. இவ்வாறு முளையம் வளர்வதற்கு உதவும் கருப்பைச்சுவரை கழிவு என கூறுவது அறியாமையின் செயற்பாடு என்றே கூறலாம்.

மாதவிடாய் காலங்களில் பெண்கள் பல விதமான உடல் உள உபாதைகளுக்கு உள்ளாகிறார்கள். சாதாரணமாக வயிற்றுவலி, உடல் உளைவு, மனச்சோர்வு, தலைசுற்றல், வாந்தி, எரிச்சல் போன்ற குணங்குறிகளுடன் நான்கு தொடக்கம் ஆறு நாட்கள் வரை இரத்தப்போக்கும் காணப்படும். ஆனாலும் பெண்களது உடல் அமைப்பானது ஆளுக்கு ஆள் வேறுபாடுகளையும் அசாதாரண நிலைமைகளையும் கொண்டே இருப்பதால் இந்த மாதவிடாய் காலத்தில் ஏற்படும் உடல் உபாதையானது வேறுபாடுகளையும் கொண்டிருப்பதை நாம் காணலாம். அத்துடன் ஒழுங்கற்ற மாதவிடாய் நிகழ்வையும் காணலாம். இவ்வாறு ஒழுங்கற்ற மாதவிடாய்க்குச் சில காரணிகள் அவர்களின் உடலியல் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத் துகிறது.

பொருளாதாரம், சுகாதாரம் தொடர்பில் கடுமையான சவால்கள் நிலவுகின்ற இந்தத் தருணத்தில் 2021 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பெண்களின் ஆரோக்கியத் துவாய்களுக்குப் புதிதாக CESS 15 சத வீத வரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனால் இலங்கையில் ‘மாதவிடாய் வறுமை’ (Menses Poverty) என்ற விடயம் பேசுபொருளாகியுள்ளது.

பெண்களின் மாதவிடாய் காலத்தில் அடிப்படை சுகாதாரம் பேணலுக்கான அத்தியாவசிய விடயங்களை அவர்கள் பெற முடியாமல் இருப்பது மாதவிடாய் வறுமை எனப்படுகின்றது. இலங்கையில் 52 சதவீதம் பெண்கள் வாழ்கின்றனர். இருப்பினும் பெண்களுக்கு மாதாந்தம் தேவைப்படுகின்ற அடிப்படை சுகாதார பொருளின் விலை பற்றி அரசாங்கம் கருத்தில் கொள்ளவில்லை. பெண்களின் அடிப்படை சுகாதாரம் பற்றிய அரசின் கரிசனையின்மையே இந்த வரி அறவீடு என இதனை எதிர்க்கும் பெண்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கருதுகின்றார்கள்.

இவ் விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ரோஹினி கவிரத்ன, ஹரினி அமரசூரிய மற்றும் டியானா கமகே ஆகிய பெண் பாராளுமன்ற உறுப்பினர்களே  இந்தப் புதிய வரிக்கு எதிராகத் தமது குரலைப் பதிவு செய்துள்ளனர். இது மக்களின் அரைபகுதியினருக்கும் அதிகமாக உள்ளவர்களின் பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் இது பற்றி உரையாற்றிய ஹரினி அமரசூரிய உரையை முடித்ததன் பின்னர் பாராளுமன்ற ஒய்வறையில் உள்ள ஆரோக்கியத் துவாய்களை அப்புறப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடத்தைப் புகைப்படம் எடுத்து தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். குறித்த புகைப்படத்துடன் “பாராளுமன்றத்தில் கூட ஆரோக்கியத் துவாய்களை அப்புறப்படுத்தும் செயற்பாட்டை ஒழுங்காக செய்துகொள்ள முடியாத நிலையில், நாடு முழுவதிலுமுள்ள பெண்கள் எவ்வளவு சிரமப்படுவார்கள் என்று எனது உரையில் தெரிவித்திருந்தேன். அதே நேரம் பாராளுமன்றத்தில் இருக்கும் எங்களைப் போலவே மாதவிடாய் வறுமையை எதிர்கொள்ளும் இலங்கை மக்களுக்குப் பொறுப்பு கூறுபவர்களாக அரசாங்கம் இருக்க வேண்டும்” என குறிப்பிட்டிருந்தார்.

“மாதவிடாய் வறுமை” என்பது ஆரோக்கியத் துவாய்களுடன் மாத்திரம் வரையறுக்க முடியாத ஒரு பிரச்சினை என்பதை ஹரினி சுட்டிக்காட்டினார். “பெரும்பாலான பெண்கள் மாதவிடாய் காலத்தில் வேலைக்குச் செல்வதில்லை. பல பாடசாலைகளில் நீர் இல்லை, கழிவறை இல்லை. இது ஆரோக்கியத் துவாய்களுடன் மாத்திரம் வரையறுக்கும் பிரச்சினை இல்லை” என கருத்து தெரிவித்திருந்தார்.

பாராளுமன்றத்தில் முடிவெடுக்கும் விடயங்களில் 95 சதவீதம் ஆண்களே பங்குபற்றுகின்றார்கள். 1945 இல் அறிமுகம் செய்யப்பட்ட இலவசக்கல்வி கொள்கையில் முறையான பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார கல்விமுறை இருக்கவில்லை. இந்நிலையில் தற்போது ஏற்பட்டிருக்கும் சூழல் ஆண்கள் மத்தியில் ‘மாதவிடாய் வறுமை’ தொடர்பாகப் போதுமானளவு சிந்திக்கும் ஆற்றல் இல்லாத நிலைமையையே எடுத்துக்காட்டுகின்றது.

2018 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பின்படி இலங்கையின் சனத்தொகை 21.67 மில்லியன் ஆகும். இவர்களுள் 52 வீதமானவர்கள் பெண்கள் ஆவர். இலங்கையில் ஏறத்தாழ 12 மில்லியன் வரையான பெண்கள் மற்றும் சிறுமிகள் மாதவிடாய் பருவத்தில் உள்ளவர்கள். இவர்களுள் 70 வீதமான பெண்கள் ‘மாதவிடாய் வறுமையை’ சந்திப்பதாகக் கடந்தகால அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தினால் 2018 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கையில் 25.1 வீதமான பாடசாலைகளில் போதுமானளவு கழிப்பறை வசதிகள் இல்லை என்ற விடயம் அம்பலமானது. பாடசாலை மாணவிகளின் வரவு வீழ்ச்சியில் இது நேரடியாக பங்களிப்புச் செலுத்துகின்றது. பாடசாலையில் இடம்பெறும் கல்வி, விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அவர்கள் சிரமப்படுவதைக் காட்டிலும் வராமல் இருப்பதையே சிறந்த தெரிவாகக் கருதுகின்றார்கள். பெண்களின் சுகாதார பொருட்களின் விலை மிக அதிகமாக இருப்பதன் விளைவாகவே பெண்கள் மற்றும் சிறுமிகள் இவ்வாறான நிலைமைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இது தவிர மேலும் பல காரணங்கள் இருந்தாலும் இதுவே பிரதானமானதும் அடிப்படையுமான காரணமுமாக இருக்கின்றது.

பெண்களின் சுகாதாரத்திற்குச் சவாலை ஏற்படுத்துவதாக இம் மாதவிடாய் வறுமை காணப்படுகின்றது. மாதவிடாய் காலத்தில் சுத்தமாயிருப்பது மிக அவசியமானது. ஏனெனில், அது ஒரு பெண்ணின் உடல் நலத்திற்கு மட்டுமல்ல, உளநலத்திற்கும் தேவையானது. மாதவிடாய் சுத்தம் என்பது தரமானதும் ஆரோக்கியமானதுமான துவாய்களை பாவிப்பதிலேயே தங்கியுள்ளது. சுத்தமான துவாய்களுக்குப் பதிலாக, துணிகளைப் பாவிப்பதானது பல சுகாதார பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

அந்த வகையில் துணிகள் இரத்தத்தை உறிஞ்சி வைக்கும் தன்மை அற்றவை. எனவே இரத்தம் துணியில் தேங்கி, கிருமிகள் உருவாகும். இது சிறுநீர் வழி மற்றும் யோனி வழியில் கிருமிகளை உட்செல்லச் செய்து சுகாதாரச் சீர்கேடுகளை உருவாக்கும். துணிகளினூடாகக் கசியும் இரத்தம், அவர்களின் உடைகளில் படுவதனால், அது வெளித் தெரியும். இது அப்பெண்ணை மனோரீதியாகத் தாக்கத்திற்குள்ளாக்கும். அத்தோடு அவர்களின் செயற்றிறனையும் குறைக்கும்.மேலும் சுத்தமான துவாய்கள் இலகுவாக மாற்றப்படக்கூடியவை. எனினும் துணிகளை மாற்றுவது கடினமானது. எனவே சுத்தமான துவாய்களை பாவிப்பது பெண்களின் மாதவிடாய் சுகாதாரத்திற்கு மிகவும் அவசியமான விடயமாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க...)



அமுதயாழினி

# திருட்டுப் பயலே!

– சிறுகதை –

எதிர் எதிரே அமர்ந்திருந்த இருவரின் முகங்களிலும் அத்தனை உணர்வுக் கலவைகள்.

அவன் எரிமலையின் கனலை அடக்கியபடி அவளை கூர்மையாகப் பார்த்து "பேசுவதற்கு முன்னால் என்னிடம் கேட்க மாட்டியா?" என்றான் கடுமையாக.

அவளோ உன் கோபம் என்னைப் பாதிக்காது என்கிற வகையில் "ஏன் கேட்கணும்?" என்றாள்.

சட்டென்று இருக்கையில் இருந்து எழுந்து "இனி, எதற்கும் என்னை எதிர்பார்க்காதே" என்று கூறிவிட்டு விறுவிறுவென்று அங்கிருந்து சென்றான்.

ஹரிகிருஷ் கோபமாக வேக நடையோடு செல்வதை மெல்லிய புன்னகையுடன் பார்த்திருந்த அனுஷரா, 1,2,3 என எண்ணலானாள். அவள் ஐந்து எனவும் போனவன் மறுபடியும் வந்து அவள் முன்னே அமர்ந்தான்.

"எதற்காக அப்படிச் சொன்னாய் அனு? பொங்கலுக்காக எல்லோருமே வந்து இருக்கிறார்கள். எல்லாச் சொந்தக்காரர்களுக்கும் தெரிய வந்தால், உன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அப்படிப் பேசுவதற்கு முன்னால் கொஞ்சம் கூட பின் விளைவுகளைப் பற்றி யோசிக்க மாட்டியா? பெரியவன் என்று சம்பந்தப்பட்டவன் நான் இருக்கிறேன். என்னிடம் ஒரு வார்த்தை கேட்க உனக்கு தோணலையா?"

"இப்போது எதற்காகச் சுடு சட்டியில் போட்ட பாப்கார்ன் போல குதிக்கிறாய் கிருஷ்? உண்மையில் உன்னை எல்லோர் முன்னாலிருந்தும் பெரிய அவமானத்தில் இருந்து காப்பாற்றி இருக்கிறேன் என்பதற்காக நீ சந்தோசப்பட மட்டுமே வேண்டும். ஆனால் நீ என்னடாவென்றால் அதை விட்டு விட்டு என்னோடு சண்டை போடுகிறாயே."

"அதுதான் ஏன் என்கிறேன்? நீ எதற்காக எனக்கு உதவ வேண்டும்? பொங்கலுக்கு வீட்டுக்கு வந்தோமா, திரும்ப போனோமா என்றில்லாமல் எதற்காக என் விசயத்தில் மூக்கை நுழைக்கிறாய்? உன்னிடம் வந்து கேட்டேனா நான் எனக்கு உதவி செய் என்று. அப்புறம் எதற்காக உனக்கு இந்த வேண்டாத வீண் வேலை?"

"சும்மா எண்ணெயில் போட்ட கடுகு போல எதற்கெடுத்தாலும் படபடக்காதே கிருஷ். 'நான்தான்' என்று சொன்னதால் அத்தை எதுவுமே சொல்லாமல் விட்டு விட்டார்கள். நான் என்பதால் இதை அவர் வேறு யாரிடமும் சொல்லப் போவதுமில்லை. ஆனால் நீ என்று தெரிந்தால் என்ன நடக்கும் என்று தெரியும் தானே."

தாயின் கோபம் மனக் கண் முன் வந்து உள்ளே குளிர் ஜுரம் பரப்பினாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், தனது கெத்துக் குறையாமல்,

"அது எனக்கும், என் அம்மாவுக்கும் இடையிலுள்ள பிரச்சினை. அடித்தாலும் பிடித்தாலும் நாங்கள் நாளையே ஒற்றுமை ஆகி விடுவோம். நீ எதற்காக என்னைக் காப்பாற்றி என்னிடம் நல்ல பெயர் வாங்க முயற்சி செய்கிறாய் அனு?"

"ஆமாம். இவரிடம் நல்ல பெயர் வாங்கி எனக்கு அடுத்த சமாதானத்திற்கான நோபல் பரிசு தரப் போகிறார்களாக்கும்" மெதுவாக நொடித்தாள் அனுஷரா.

"என்ன முனுமுனுக்கிறாய்? இப்படியே உதவி செய்கிறேன் என்ற பெயரில் என்னை வளைத்துக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம் என்று திட்டம் போடுகிறாயோ என் அத்தை மகள் ரத்தினமே! அது கனவிலும் நடக்காது. சரியா?"

ஹரிகிருஷ் சொன்னதைக் கேட்டதும் அத்தனை நேரமும் காத்து வைத்த பொறுமை எல்லாம் நொடியில் பறக்க கோபாவேசமாக எழுந்தாள் அனு.

"ஆமாம். இவர் பெரிய மன்மதக் குஞ்சு. இந்த ஒல்லிப் பிச்சானைக் கல்யாணம் செய்யத்தான் இங்கே காத்துக்கொண்டு இருக்கிறார்களாக்கும். லைட் ஹவுஸ் போல வளர்ந்து கொண்டு அவரிட நினைப்பைப் பாரேன். ஆசை, தோசை, அப்பளம், வடை. நீ ஆசைப்பட்டாலும் நான் ஒருநாளும் உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேன். சும்மா என்னைச் சொல்லி நீ கனவு காணாதே என் மாமன் மகன் மரிக்கொழுந்தே!"

இப்படியே இருவரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் வார்த்தையாட வாக்குவாதம் வலுத்ததே தவிர, அங்கே ஒரு முடிவு வருவதாயத் தெரியவில்லை. இருவரும் கண்கள் சிவக்க மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

இறுதியில் இரண்டு வயது பெரியவனான ஹரிகிருஷ்தான் கொஞ்சம் விட்டுக்கொடுத்து இறங்கி வந்தான்.

"சரி, உண்மையைச் சொல்லு. எதற்காக அம்மாவிடம் நீ எடுத்ததாகச் சொன்னாய்? அம்மாவுக்கு நான் என்று தெரிந்தால், நீ சொன்ன மாதிரி அடி பின்னுவார்கள் தான். ஆனால் எனக்கு உன்னைப் பற்றித் தெரியும் அனு. என்னிடம் எதுவும் காரியம் ஆக வேண்டியது இல்லை என்றால் நீ இந்த திருட்டுப் பழியை உன்னில் ஏற்றிருக்க மாட்டாய். அதனால் சும்மா தர்க்கம் பண்ணாமல் உனக்கு என்ன வேண்டும் என்று சொல்லு".

கிருஷ் இவ்வாறு சொன்னதும் தன் திட்டம் பலித்து விட்ட மகிழ்ச்சியோடு 'அப்படி வாடா வழிக்கு என் மாமன் மகனே' என்று மனதுக்குள் மகிழ்ந்தவள்,

"எனக்கு நீ செய்த அந்த ட்ராகன் பட்டம் வேணும் கிருஷ் அத்தான்"

ஒருவாறு தன் தேவையைப் போட்டுடைத்தாள் மரியாதையுடன்.

"அதுதானே பார்த்தேன். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? நீயாவது ஏதும் தேவையில்லாமல் என்னைக் காப்பாற்றுவதாவது".

"ப்ளீஸ் கிருஷ். இப்போது இல்லை. நீ பொங்கலுக்கு இங்கே ஏற்றி விட்டு நான் ஊருக்குத் திரும்பப் போகும் போது தந்து விட்டால் போதும். நீ இரண்டு மாதங்களாகக் கஸ்டப்பட்டு செய்தது என்று தெரியும். ஆனால் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கே. நீ தந்தாய் என்றால் நான் எங்கள் ஊரில் ஃபீச்சுக்குப் போகும் போது கொண்டு போய் ஏற்றுவேன். எல்லோரும் பார்ப்பார்கள். நான் என் கிருஷ் அத்தான் செய்தது என்று சொல்வேன். அது உனக்கும் பெருமை தானே".

எங்கே மறுத்து விடுவானோ என்ற பயத்தில் அவனை சம்மதிக்கும் விதமாகப் பேசிக் கொண்டிருந்த பன்னிரெண்டு வயது அனுஷராவையே பார்த்துக் கொண்டிருந்தான் பதினான்கு வயது ஹரிகிருஷ். கண்கள் ஜொலிக்க முகம் முழுவதும் விகசிக்கக் சொல்லிக்கொண்டு இருந்தவளின் மகிழ்ச்சியைக் கெடுக்க மனமில்லாமல் சிறு முறுவலோடு சம்மதித்தான் கிருஷ்.

அவன் சம்மதம் கிடைத்ததும் மகிழ்ச்சி தாங்காமல் துள்ளிக் குதித்தவள்,

"ரொம்ப தாங்க்ஸ் கிருஷ். தரமாட்டாய் என்றுதான் நினைத்தேன். சித்தப்பாவின் ராமும் உன்னிடம் கேட்கப் போகிறேன் என்று சொன்னான். அவனுக்குக் கொடுத்து விட மட்டாய் தானே".

கண்களில் சிறு சந்தேகத்தோடு கேட்டவளை,

"இல்லை. பயப்படாதே. யாருக்கும் கொடுக்க மாட்டேன். இங்கே நான் ஏற்றும் போது என்னோடு வா. எப்படி ஏற்றுவது என்று சொல்லித் தருகிறேன்".

அவன் இதைக் கூறியதும் இரட்டை மகிழ்ச்சியுடன்,

"ரொம்ப ரொம்ப தாங்க்ஸ் கிருஷ். ஆனால் இனி லட்டு வேண்டும் என்றால் திருடிச் சாப்பிடாதே. என்னிடம் கேட்டால் நானே அத்தையிடம் கேட்டு வாங்கித் தருவேன். சரியா? நேற்று நீ எடுக்கும் போது நான் பார்த்த படியால் தப்பினாய். வேறு யார் கண்டிருந்தாலும் அத்தையிடம் மாட்டி விட்டிருப்பார்கள்".

அவள் 'திருடித் தின்றான்' என்று கூறியதைக் கேட்டதும் கொஞ்சம் ரோசம் வரப் பெற்றவன்,

"நான் ஒன்றும் எனக்காக எடுக்கவில்லை. வெளியே பிச்சைக்காரர் ஒருவர் நின்றிருந்தார். அவருக்குத்தான் கொண்டு போய்க் கொடுத்தேன். அம்மாவுக்கு தெரிந்தால் 'நான் முதுகு நோக மூன்று மணி நேரமாக லட்டுப் பிடித்தது பிச்சைக்காரனுக்குப் போடவா?' என்று திட்டுவார்கள். அடிப்பார்கள். அதுதான் களவாக எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தேன். தினமும் பழைய சோற்றையும் மிஞ்சியதையும் சாப்பிடுபவர் ஒரு நாளாவது நல்ல பலகாரங்கள் சாப்பிடட்டுமே".

"ஓ... அது நல்ல விடயம் தான். ஆனால் செய்ததில் பாதியைத் தூக்கிக் கொடுத்தது கொஞ்சம் ஓவர்தான்" என்று சொல்லிச் சிரித்தவள்,

"சரி கிருஷ். நான் மற்றவர்களோடு சேர்ந்து தோட்டத்துக்குப் போகப் போகிறேன். ஃபாய்!"

கூறிவிட்டு அவனின் பதிலை எதிர்பார்க்காமல் சிட்டெனப் பறந்தாள் அனுஷரா. சிறு முறுவலோடு தனது ட்ராகன் பட்டத்துக்கு விண் கட்டுவதற்காகச் சென்றான் ஹரிகிருஷ்.

நொடியில் கரியாகும் பட்டாசுகள், அதிக விலையில் ஆடம்பர உடைகள் என்று அத்தியாவசியமற்ற வீண் விரய செலவுகளோடு பண்டிகைகளைக் கொண்டாடும் நாங்கள் கொஞ்சமாவது வறியவர்கள் பற்றியும் நினைத்துப் பார்க்க வேண்டும். அவரவர் வசதிக்கேற்ப சிறுசிறு உதவிகளே போதுமானது.

பகிர்ந்து உண்போம்!

சிறந்து வாழ்வோம்!

■

# நம்பிக்கை தரும் சிறுவர் இலக்கிய முயற்சிகள்

## சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள் குறித்த பார்வை - தொகுப்பு மு.மேதினிகா, மு.கோகனன்

**புலோலியூர் வேல்நந்தன்**

ஈழத்தில் மிக அண்மைக்காலமாக சிறுவர் இலக்கிய முயற்சிகள் அதிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஒரு புறம் சிறுவர் சஞ்சிகை முயற்சிகள் முன்னெடுக்கப்படும் அதேவேளை மறுபுறம் சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் நாடகங்கள் எனப் பல்வேறுபட்ட சிறுவர் இலக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகிறது. அந்த வகையில் பெரும்பாலான சிறுவர் இலக்கியப் படைப்புக்கள் பெரியவர்கள் எழுதும் சிறுவர் இலக்கியப் படைப்புக்களாக அமைய மிக அண்மையில் வெளிவந்த சிறுவர் எழுதிய சிறுவர் கதைகள் என்ற தொகுப்பானது சிறுவர்கள் எழுதிய கதைகளை, சிறுவர்களே தொகுத்து வெளியிட்டுள்ள வகையில் தற்புதுமை மிக்க முன்னுதாரணப் படைப்பாக அமைந்து சிறப்புப் பெறுகின்றது. இத் தொகுதியைத் தொகுத்திருப்பவர்கள் - ஈழத்தின் பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளியாக விளங்குகின்ற நண்பர் இ.சு.முரளிதரனின் புதல்வர்களான மேதினிகா, கோகனன் ஆகியோர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் இத்தொகுப்பில் அவர்களுடைய பல கதைகளும் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். தந்தை வழியில் புதல்வர்களும் கலை இலக்கிய முயற்சிகளில் காலடி எடுத்து வைத்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இதே போல இக் கதைத் தொகுதியில் கதைகளை எழுதியுள்ள ஜெயசுவேதா, லிவியானா ஆகியோரின் தந்தையான ஜெ.ஜெயகணேஸ் அவர்கள் யாழ்ப்பாணத்தின் பிரபல வரலாற்றுப்பாட ஆசிரியர் என்பதும் இலக்கியத் துறைசாராத அவர், தன் பிள்ளைகளைக் கொண்டு கதை புனைய வழிகாட்டியிருப்பதும் சிறப்புக்குரியதாகும்.




இக் கதைத் தொகுதியின் அட்டைப்பட ஓவியங்களை வரைந்திருப்பவர் செல்வி த.அக்ஷிகா அவர்கள். அவரும் இத் தொகுப்பில் சில கதைகளை எழுதியுள்ளார். ஜீவநதியின் 201 ஆவது வெளியீடாக இத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இத் தொகுப்பில் எல்லாமாக 40 சிறுவர் கதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஒருவர் பல கதைகளையும் எழுதியுள்ளார் என்ற வகையில் இக் கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இக் கதைத்தொகுதிக்குப் பங்களிப்புச் செய்தவர்களாக யாழ்.இந்துக்கல்லூரி தரம் 7 மாணவர்களான மு.கோகனன், க.கைலாஷ் ஆகியோரும் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மு.மேதினிகா, வ.கஜானா, ம.கனியா, ஜெ.ஜெயசுதா ஆகியோரும் யாழ் இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த த.அக்ஷிகாவும், புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தைச் சேர்ந்த உ.சாய்தனியா, ஜெ.லிவியானா ஆகியோரும் விளங்குகின்றன. இவர்களது பல கதைகள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. வழமையான சிறுவர் கதைப் பாணியில் இருந்து வேறுபட்டதாய் புதிய விஞ்ஞான அறிவியல் விடயங்களையும் கலந்ததாய் புதிய மொழி நடை கொண்டதாய் இக் கதைகள் அமைந்துள்ளமை சிறப்புக்குரியதாகும்.

இத் தொகுதி தோன்றிய வரலாற்றை தொகுப்புரை வழி அறிய முடிகின்றது. அந்த வகையில் இந்தப் புத்தகத்தில் உள்ள அனைத்துக் கதைகளும் எங்களுடைய வகுப்பறைகளிலும், மாலை நேரங்களில் ஒன்றாகச் சேர்ந்து வீதியில் நடைப்பயிற்சிக்குச் செல்லும் போதும் பெற்றோருடன் உரையாடும் போது சொல்லப்பட்ட கதைகளாகும் என்கின்றனர் தொகுப்பாளர்கள். மேலும் பெற்றோர்கள், நண்பர்கள் ஆசிரியர் முன் இக் கதைகளைச் சொல்லும் போது கேட்டு மகிழ்ந்து சில யோசனைகளைத் தந்தனர். அவற்றை வைத்துக் கொண்டு சில மாற்றங்களைச் செய்தோம். அவற்றில் சில ஏற்கெனவே தீம்புனலில் வெளிவந்துவிட்டன எனக் கூறியிருப்பதுடன். எங்கள் கதைகளை நீங்கள் வாசித்து மகிழுங்கள் இது போன்ற கதைகளை நீங்களும் எழுதுங்கள் எனக் கூறி இருப்பதுடன் தானா விஸ்ணு மாமாவிற்கும், ஜீவநதி பரணீதரன் மாமாவுக்கும் ஓவியங்களை வரைந்த அக்ஷிகாவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர் தொகுப்பாளர்கள்.

இனி இத் தொகுதியின் கதைகளுக்குள் நுழைந்து வகை மாதிரியாக அக் கதைகளில் சிலவற்றின் சிறப்புக்களை, அவை சொல்லப்பட்ட மொழி, பொருள், கற்பனை, தற்புதுமை என்ற அடிப்படையில் நோக்குவது பொருத்தமுடையதாகும் என எண்ணுகிறேன். கதைத் தொகுதியின் ஆரம்பத்தில் மு.கோகனன் எழுதிய ஆபத்து உதவியும் உறவின் ஆபத்தும், அழகான விலங்கு, அணிலும் நரியும், தாய் சொல்லைத் தட்டாதே, பிறந்தநாள் பரிசு ஆகிய கதைகள் இடம் பெற்றுள்ளன. இதில் முதற் கதை சிங்கக்குட்டிக்கு உதவிய மான்குட்டி தாய் மானிடம் அதன் பிறந்தநாளுக்குப் போகலாமா எனக் கேட்ட போது தீயவர்களுக்கு ஆபத்தில் உதவலாம் ஆனால் அவர்களோடு உறவு கொள்வது ஆபத்தானது எனத் தாய்மான் கூறிய பதில் வழி சிறந்த விழுமியக் கருத்து சொல்லப்படுகிறது. அதே போல பேரழகியான இளவரசியைப் பார்த்து சிங்கம் இந்த உலகில் அழகிய மிருகம் எது என்று கேட்ட போது, அவள் சமயோகிதமாய் குரங்கு எனப் பதில் சொல்லி விடுதலையான செய்தியைக் கூறுகிறது. இதே போல தவறான ஆளுக்குத் தவறான பரிசு கொண்டு குரங்கு பட்ட அவலத்தைப் பிறந்தநாள் பரிசு என்ற கதை கூறுகிறது.

அடுத்து த.அக்ஷிகாவின் கதைகளாக திருடனின் நேர்மை, வாத்தின் நட்பு, நரியின் தந்திரம், ஆமையும் கோழியும் முயலும் ஆகிய கதைகள் இடம் பெற்றுள்ளன. முயல்களுக்கும் வாத்துக்குமான நட்பை "நட்பு" என்ற கதை பேசுகிறது. இதில் இரண்டு முயல்கள் ஒன்றாய்ப் பள்ளியில் படித்தன. அப் பள்ளிக் கூடத்துக்குப் புதிதாய் வாத்தொன்று வந்தது என்ற கற்பனை சிறப்பாக அமைந்துள்ளது. அதே போல ஆமையும் கோழியும் முயலும் கதை, ஆமையும் முயலும் கதையில் இருந்து உருவாக்கப்பட்ட புதிய கற்பனை கொண்ட வித்தியாசமான கதையாக அமைந்து சிறப்புப் பெறுகிறது.

மு.மேதினிகாவின் கதைகளாக றோபோ வாசகன், அதிகேசரியும் மதிகேசரியும், தாத்தாவின் அறிவுரை, தூக்கணங் குருவியின் வீடு, புத்திசாலி எலி போன்ற கதைகள் இடம் பெற்றுள்ளன. இக் கதைகளின் தலைப்புக்களே வித்தியாசமாய் அமைந்து சிறப்புப் பெறுகின்றன. இதில் ரோபோ வாசகன் என்ற கதை விஞ்ஞானப் புனைகதைக்குரிய தன்மை கொண்ட ஒரு கதையாக அமைந்து சிறுவர் கதைகளில் ஒரு கதையாக அமைந்து சிறுவர் கதைகளில் ஒரு புதுமைப் படைப்பாக அமைகிறது. 2050 ஆம் ஆண்டில் கதை நடக்கிறது. மனிதர்களை வேலைக்கு அமர்த்த முடியாது என்பதால் வர்ஷன் லலித் என்ற ரோபோவை வாங்கி வேலைக்கு வைத்துக் கொண்டான் என கதை தொடங்கி ரோபோ கதைப்புத்தகங்களை வாசித்து அறிவை பெருக்கியது எனச் சொல்லி இறுதியில் ரோபோவிடம் வர்ஷன் தண்ணீர் கேட்ட போது இந்த ரோபோ உங்களுக்கான நீரை நீங்களே சென்று எடுக்க வேண்டும் பிறரை அடிமை போல நடத்தக்கூடாது அனைவரும் உலகில் சமமானவர்கள் என்று கூறியதாகக் கதையை முடித்திருப்பது தற் புதுமையானதாக அமைந்துள்ளது.

**புதுப்புனல்-21**


அடுத்து உ.சாய்தனியாவின் கதைகளாக தும்பியும் கமலனும், அமைதி, நண்பிகளின் பகிர்வு, மஞ்சள் பலூன் ஆகிய கதைகளும் இதில் கள்ளிச் செடி, பருத்திச் செடியை வைத்து அழகு பற்றி சொல்லப்பட்ட அமைதி என்ற கதை சிறப்பானதாக அமைந்துள்ளது. ஜெ.லிவியானாவுடைய காகமும் மயிலும், வண்டின் முயற்சி, மேகங்கள், வீண்பெருமை போன்ற கதைகள் இடம்பெற்றுள்ளன. வண்டின் முயற்சியைக் கண்டு அரசாட்சியை ஏற்ற இளவரசரின் கதை, குதிரையையும் எருமையையும் வைத்துச் சொல்லப்பட்ட வீண் பெருமை கொள்ளக் கூடாது என்ற கதை என்பன சிறப்பு.

அடுத்து ஜெ.ஜெயசுவேதாவினுடைய தேவதையின் பரிசு, பேராசை பெரு நட்டம், வேட்டைக்காரர்களின் ஓவியம், மந்திரியின் மதிநுட்பம் போன்ற கதைகளில் மந்திரியின் மதிநுட்பம் என்ற கதை தூய தேனை நெருப்பு வைத்து கண்டுபிடிக்கலாம் என்ற உண்மையை அரசாட்சி என்ற கற்பனையோடு கலந்து பேசி சிறப்புப் பெறுகிறது. கஜானாவினுடைய புத்திசாலி ஆடு, போலிச் சாமியார், ஒட்டகத்தின் கெட்ட அகம், பஞ்சாமிர்தக்கனி ஆகிய கதைகளில் ஒட்டகம் பாலைவனத்தில் வாழ்வதற்கான கற்பனை விளக்கம், பஞ்சவர்ணக் கிளிகளின் மதிநுட்பம் என்பன சிறப்பு.

க . கைலாஷ்சினுடைய ஏமாற்றுவோர், ஏமாறுவார், யானையும் குருவியும், கூண்டுக்கிளியும் சோலைக்கிளியும், பெறுமதி போன்ற கதைகளும் சிறப்புக்குரியன. காகத்தின் கூட்டில் குயிலின் முட்டை என்ற விடயமும், சுதந்திரம் குறித்த கிளிகளின் நிலைப்பாடும், நண்பனுக்குக் கொடுத்த வாக்கு தங்கத்தை விட பெறுமதி என்ற விடயங்களும் இக் கதைகள் வழி சொல்லப்படுகின்றன.

நிறைவாக ம.கனியாவின் வெள்ளைக்காசம், விக்ரமாதித்தனும் ரோபோவும் , அச்சம் தவிர், மின்குமிழ் சொன்ன கதை ஆகிய கதைகளும் தற் புதுமையான கற்பனைகளாய், விஞ்ஞானக் கருத்துக்களை இணைத்துச் செல்வதாய் அமைந்து சிறப்புப் பெறுகின்றன. இதில் விக்ரமாதித்தனும் ரோபோவும் என்ற கதை அம்புலிமாமா விக்ரமாதித்தன் கதை வழி வரும் முறையில் ரோபோ என்ற தொழில்நுட்ப விடயத்தை இணைத்து கேள்வியும் பதிலுமாக அமைந்து சிறப்புப்பெறுகின்றது. அச்சம் தவிர் என்ற கதை தேர்தல் அரசியலை மிருகங்களை வைத்துப்பேசும் அரசியல் குறியீட்டுக்கதையாக அமைந்து சிறப்புப் பெறுகின்றது. மின்குமிழின் கதையிலும் அதன் கண்டுபிடிப்பு சார்ந்த பல புதிய தகவல்கள் கதை அமைப்பில் கூறப்பட்டுள்ளன. பின் அட்டை இவ்ஆக்கத்துக்குப் பங்களித்தோரின் விபரங்களோடு கூடிய படங்களால் நிறைகிறது.

ஒட்டு மொத்தமாக நோக்கின் சிறுவர்களே எழுதி அவர்களே தொகுத்த இச்சிறுவர் கதைத்தொகுதி ஈழத்தில் அல்லது தமிழில் இதுவரை வெளிவந்துள்ள சிறுவர் கதைத்தொகுதிகளில் இருந்து தற்புதுமை கொண்டதாய் அமைந்து சிறப்புப் பெறுவதுடன் ஏனைய மாணவர்களும் பின்பற்றக்கூடிய ஒரு முன்னுதாரண முயற்சியாய் அமைந்து சிறப்புப் பெறுகின்றது. நாளைய முழுமதிகளான இவ் இளம்பிறைகளை வாழ்த்துவதில் தீம்புனலின் புதுப்புனல் பேருவகை அடைகின்றது. ■




# அவுஸ்திரேலியா மெல்பனில்

# மல்லிகை ஜீவா நினைவரங்கில்

## முருகபூபதியின் மூன்று நூல்களின் வெளியீடு

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவா அவர்களினால் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட எழுத்தாளரும் சமூகப்பணியாளருமான முருகபூபதியின் 70 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியாகும் கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை) நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை) பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல்களின் வெளியீட்டு அரங்கு இம்மாதம் 19 ஆம் திகதி (19-12-2021)ஞாயிற்றுக் கிழமை மாலை 4.00 மணிக்கு அவுஸ்திரேலியா மெல்பனில் Berwick senior citizens hall (112 High Street, Berwick VIC 3806) மண்டபத்தில் நடைபெறும்.


மெல்பன் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி சாந்தி சிவக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வு, திருமதி மேகானந்தா சிவராசாவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.


இந்த ஆண்டு தொடக்கத்தில் பெருந்தொற்றினால் மறைந்த ஈழத்தின் மூத்த எழுத்தாளரும், மல்லிகை இதழின் ஆசிரியருமான டொமினிக்ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி, மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு, அவரைப்பற்றிய நினைவுரை நிகழ்த்தப்படும். எழுத்தாளர் டொக்டர் நடேசன் நினைவுரையாற்றுவார். சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் முருகபூபதியின் நூல்களை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

கொழும்பு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்) நூல் குறித்து செல்வன் ஹரிஜன் பசுபதிதாசனும் யாழ். ஜீவநதி வெளியீடாக வந்துள்ள கதைத் தொகுப்பின் கதை நூல் குறித்துத் திருமதி கலாதேவி பாலசண்முகன், திரு. அசோக்குமார் ஜனார்த்தனன், திரு. க. ராஜா ஆகியோரும், கொழும்பு குமரன் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள நடந்தாய் வாழி களனி கங்கை நூல் குறித்து திரு. கிறிஸ்டி நல்லரெத்தினமும் உரையாற்றுவர்.

நடந்தாய் வாழி களனி கங்கை (கட்டுரை)

இலங்கையின் வற்றாத ஜீவநதியான களனி கங்கையின் தீரத்தில் நிகழ்ந்த வரலாற்றுச்செய்திகள், மற்றும் ஐதீகக்கதைகளின் பின்னணி, அங்கு ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பற்றிய விவரணச்சித்திரமாகப் படைக்கப்பட்ட களனி நதியின் கரையோரம் எங்கும் நடந்த சுவாரசியமான கதைகளைக்கூறும் நூல். கதைத் தொகுப்பின் கதை (சிறுகதை) புகலிட வாழ்வுக்கோலங்களை சித்திரிக்கும் 15 சிறுகதைகளைக் கொண்டிருக்கும் முருகபூபதியின் ஏழாவது சிறுகதைத் தொகுதியான கதைத் தொகுப்பின் கதை நூலில் ஒவ்வொரு கதை பற்றியும் 15 பேர் தமது வாசிப்பு அனுபவங்களையும் பதிவு செய்துள்ளனர்.




பாட்டி சொன்ன கதைகள்

சின்னஞ்சிறிய வயதில் முருகபூபதியின் பாட்டி அவரை உறங்கவைக்கும்பொழுது சொன்ன (Bed time stories) கதைகளை உருவகக் கதைகளாக மாற்றி, இன்றைய நவீன காலத்திற்கு ஏற்ப எழுதப்பட்ட சிறுவர்களுக்கு மாத்திரமின்றி பெரியவர்களுக்குமான படைப்புகள். இந்த நூல் தமிழ் நாட்டில் வெளிவந்தமையால், அங்கு நூலகசேவைகள் திணைக்களம், சிறுவர் இலக்கிய வரிசையில் இதனைச்சேர்த்தது. பாட்டி சொன்ன கதைகள். தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில கதைகள், சிறுவர்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் சிறுவர் கதைகள் என்ற பெயரில் வண்ணப்படங்களுடன் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

இதனை இலங்கை கல்வி அமைச்சு சிறுவர் இலக்கியவரிசையில் இணைத்துள்ளது.

●

# குறுந்தொகை காட்டும் சங்ககாலப் பழக்க வழக்கங்கள்

த.அபிநாத்



சங்கத் தமிழ் பிரசவித்த எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை சிறப்புக்குரிய இலக்கியமாகும். அகவற்பாவின் அமைப்பில் சுருங்கிய அடிவரையறையைக் கொண்ட 400 பாடல்களின் தொகுப்பாவதால்தான் குறுந்தொகை எனப் பெயர் பெற்ற இவ்விலக்கியம் பண்டைய தமிழர்தம் அகத்தெழும் உணர்ச்சிகளை வருணனையாம் வடிகால்களூடாய் சீரிய முறையில் செப்பி கற்போர் எளிதில் உணரும்படி அமைந்துள்ளது. இக் குறுந்தொகையில் அக்கால சமூகத்தால் பின்பற்றப்பட்ட பழக்கவழக்கங்களும் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

தினைப்புனத்தில் தினை விளைந்தால் முதற் கதிர்களை இறைவனுக்கு படையலிட்ட பின்னர் உண்ணும் வழக்கம் சங்ககால மக்களிடம் காணப்பட்டுள்ளது. இவ்வழக்கத்தை “புனவன் துடவை பொன்போல் சிறுதினைக்/ கடியுண் கடவுட்கு இட்ட சில்குரல்” (குறு:105)

என்னும் செய்யுள் எடுத்துரைக்கிறது. இதனூடாக அன்றைய தமிழ்மக்களிடம் இறைவனுக்கு நேர்த்திக்கடன் வைத்து நிறைவேற்றும் பழக்கம் இருந்துள்ளது என்பதைக் கண்கூடாய் அறியமுடிகிறது.

கருமப்பொருட்டு வீட்டை விட்டு வெளியேறிய தலைவன் நல்ல முறையில் வீடு திரும்பவேண்டும் என்பதற்காக மலைப்பக்கத்தில் உள்ள வெற்றித்தெய்வமான சூலமேந்திய கொற்றவைக்கு பலிக்கடன் நேர்ந்து, நோன்பு நோற்று, கையில் நூல் கட்டுதலும் தலைவன் திரும்புவதை அறிவதற்காக பறவைச்சகுனம் பார்த்தலும் நற்சொல் கேட்கும் வழக்கமும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இம்முறையை குறுந்தொகை பாவொன்று எதிர்மறையான முறையில் சுட்டிநிற்கிறது.

“விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக் / கடனும் பூணாம் கைந்நூல் யாவாம் / புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்” (குறு : 218)

சகுனம் பார்க்கும் பழக்கமும் சங்ககாலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கங்களில் இன்றியமையாததாகக் காணப்பட்டுள்ளது. நீர் நிலத்தில் மேய்ந்த குருகுகள் தம் இருப்பிடம் நோக்கி பறந்து வருதலையும் மெலிவுற்ற தோள்கள் பொலிவுற்று கடகம் செறிந்தமையும் தலைவன் வருவதற்குரித்தான நற்சகுனங்களாக தலைவி எண்ணும் வண்ணமாக “குருகும் இருவிசும்பு இவரும் புகலும் / வரிவண் டூதி வாயி நெகிழ்ந்தனவே / சரிவளைப் பொலிந்த தோளும் செற்றும் / வருவர்கொல் வாழி தோழி...” (குறு :260)

மேற்கூறப்பட்ட செய்யுள் மூலம் நிமித்தம் பார்க்கும் வழக்கம் சங்க காலத்தில் ஆழவேரூன்றியிருந்த தன்மையை அறியமுடிகிறது. காக்கைக்கு அன்னமிடும் பழக்கமும் சங்கவாழ்வியலில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. காக்கை பாடினியார் நச்செள்ளையார் குறுந்தொகையில் “விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே” (குறு:210) எனப் பாடியதும் அவ்வழக்கம் நிலவியிருந்ததை காட்டுகிறது.

இன்றைய சமூகத்தில் நீதி மன்றங்களின் தீர்ப்பே சமூகத்தரால் அங்கீகரிக்கப்படுவது போல சங்கால மக்கள் மத்தியில் நான்கு ஊர்களில் இருந்து வந்து ஒரு ஊரிலே கூடி சங்குகளும் பறைகளும் ஒலிக்க வழங்கும் தீர்ப்பை நேர்மையானதாக எண்ணியுள்ளதை “பறைபட பணிலம் ஆர்ப்ப இறைகொள்பு / தொன்மூ காலத்துப் பொதியில் தோன்றிய / நாலூர்க் கோசர் நன்மொழி...” (குறு: 15) மேற்கூறிய செய்யுள் காட்டுவதன் மூலம் அறிய முடிகிறது.

பிறந்தகத்தில் இருந்து திருமணம் மூலமாக புகுந்த வீடு செல்லும் பெண் புகுந்த வீட்டில் கணவன் இழைக்கும் கொடுமைகளைப் பிறந்த வீட்டில் சொல்லல் தகாது என்ற வழக்கம் சங்ககாலத்தில் பின்பற்றப்பட்டு வந்துள்ளமையை “ தண்ணந் துறைவன் கொடுமை / நம்முன் நாணிக் கரப்பாடும்மே” (குறு 19) என்ற அடிகளூடாய் காணமுடிகிறது. சங்க காலத்தில் கட்டுவிச்சியான குறத்தியிடம் குறி கேட்கும் பழக்கமும் நிலவி வந்துள்ளது.

“அகவன் மகளே! அகவன் மகளே! / மனவுக்கோப்பனன் நன்னெடுங் கூந்தல்/ அகவன் மகளே! பாடுகபாட்டே / இன்னும் பாடுக பாட்டே /அவர்நன்னெடுங்குன்றம் பாடிய பாட்டே” (குறு: 23) மேற்கூறிய பாவில் அகவன் மகளாகக் குறிக்கப்படும் கட்டுவிச்சி சங்கு மணிக்கோவை போன்ற நரைக் கூந்தலுடையவளாய் காட்டப்பட்டுள்ளாள். தலைவன் தலைவியை விட்டு நீங்கும் போது அவன் வரவை எதிர்பார்த்து நாட்கணக்கு எண்ண சுவரில் கோடிட்டு எண்ணும் பழக்கமானது சங்க காலத்தில் நிலவியுள்ளதை “வீங்கிழை நெகிழ விம்மல் ஈங்கே /ஏறி கண் பேதுறல் ஆய்கோ டிட்டுச்/ சுவர்வாய்ப் பற்றுநின் படர்சேணீங்க” (குறு: 358) வெளிப்படுத்திக் காட்டுகிறது.

சங்கால வாழ்வியலில் தலைவி பருவத்திற்கேற்ப பசலை நோயுற்றால் முருகு அணங்கியதாய் கருதப்பட்டு முருகனுக்கு வேலன் பூசாரியால் வெறியாட்டு எனும் சடங்கு நிகழ்த்தப்படும் தன்மையானது ஆழ வேரூன்றி இருந்தமையை சங்க இலக்கியங்கள் பல சுட்டி நிற்கின்றன. குறுந் தொகையும் “பல்வே றுருவில் சில்ல விழ்மடையொடு / சிறுமறி கொன்றியவள் நறுநுதல் நீவி /வணங்கினை...” (குறு: 362) காட்டி நிற்கிறது. இன்னொரு செய்யுளில் முருகன்பால் மேற் கொள்ளப்படும் இவ் வெறியாட்டு நிகழும் களத்தில் பூசை நிமித்தம் செந்நெற் பொரி சிதறியிருக்கும் தன்மை புன்கமர மலர்கள் வெண் மணலில் சொரிந்திருப்பதற்கு உவமையாக கூறப்பட்டுள்ளதை காணக் கூடியதாய் உள்ளது. “நனை முதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல் / வேலன் புனைந்த வெறியயர் களந் தொறும் / செந்நெல் வெண் பொரி சிதறி அன்ன” (குறு: 53) தொகுத்துப் பார்க்கின் தினைப் புனத்தில் விளைந்த முதற் கதிரை இறைவனுக்கு படையலிட்டபின் உண்ணல், நேர்த்திக்கடன் வைத்து நோன்பு நோற்று கையில் நூல் கட்டுதல், கோசர்கள் கலந்தாய்ந்து தீர்ப்பு நல்குதல், புகுந்த வீட்டில் கணவன் செய்யும் கொடுமைகளை பெண் பிறந்த வீட்டாருக்கு கூறாமை, அகவன் மகள் குறி சொல்லல், வெறியாட்டை நிகழ்த்துதல், காக்கைக்கு உணவிடல், சகுனம் பார்த்தல், நாட்கணக்கெண்ணச் சுவரில் கோடு கிழித்தல் முதலிய பழக்கவழக்கங்களை சங்க காலத்திற்குரித்தானவையாக குறுந்தொகை வெளிப்படுத்திக் காட்டி நிற்கிறது.



●

## பதஞ்சலி யோக சூத்திரத் தொடர்

# தவம் செய்ய விரும்பு கர்ம யோகம், ஞான யோகம், பக்தி யோகம்

தவம் என்றதும் காடு, மலை மற்றும் ஆற்றங்கரைகளை நாடிச் சென்று ஞானம் பெற்ற பல யோகியரின் கதைகள் நமக்கு ஞாபகம் வரலாம். தற்காலத்தில் நகர்ப்புற யோகி (Urban Yogi) என்ற பதம் கையாளப்படுகிறது. கிரியா பாபாஜியிடம் தீட்சை பெற்ற யோக அவதார் லாகிரி மகாசாயரின் வாழ்க்கை பலருக்கு முன்மாதிரியாக இருந்தது. ஆங்கில ஆட்சியின் இராணுவ பொறியியல் பிரிவில் கணக்காளராகவும், குடும்பத் தலைவராகவும் அதே நேரம் கிரியா யோகியாகவும் வாழ்ந்து பல சீடர்களையும் உருவாக்கினார். இல்லற யோகி என்ற சொல்லாடல் பிரபலமாவதற்கு உதாரணமாகத் திகழ்கிறார். இன்று நகரங்களின் சந்தடி மிக்க சாலைகளில் நாம் அறியாமலே, சாதாரணமாக நம்மைப் போலவே உடையணிந்த தன்னையுணர்ந்த யோகியை, ஞானியை கடந்து செல்வதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. பாபாஜியின் கிரியா யோகம் உலகமயமான பின்பு, பல்வேறு பேதங்களைக் கடந்து இந்த யோகமானது விஞ்ஞான பூர்வமாக மனிதனில் தூங்கும் உயரிய உணர்வுநிலையைத் தூண்டி எழுப்பி, அவனைப் பரிணாம வளர்ச்சியின் இன்னொரு நிலைக்கு உயர்த்திவிட வழி வகுத்துள்ளது.

"தவம், சுய அறிதல், செயலின் பயனை இறைவனுக்கு அர்ப்பணித்தல் கிரியா யோகம்"

இதில் 'தவம்' என்பது சுயஒழுக்கம் அல்லது தியானம் என்ற பொருளில் நம் வினைகளை (கர்மா) மாற்றியமைத்தலோடு தொடர்புடைய செயல் ஆவதால் கர்மயோகம் ஆகிறது. 'சுய அறிதல்' என்பது 'நான் யார்?' என்ற சுய தேடல் அல்லது விசாரணையில் ஈடுபடுதலால் ஞானயோகம் ஆகிறது. 'செயலின் பயனை இறைவனுக்கு அர்ப்பணித்தல்' என்பது பக்தியோகம். இந்த மூன்று யோகங்களும் சேர்ந்ததே கிரியா யோகம்.

இது சாதனை பாதத்தின் முதல் சூத்திரம். கிரியா யோகத்தின் வரலாற்றை முன்னர் பார்த்தோம். கிரியா யோகத்தின் கூறுகளை இக்கட்டுரையில் பார்க்கலாம். தவம் என்பதன் வரைவிலக்கணத்தைப் பலரும் பல்வேறு விதமாகக் கூறியிருப்பினும் பொருளும் விளைவும் ஒன்றுதான்.

உடலும் புலன்களும் தன்வழி செல்லாமல், மனம் என்ற கடிவாளத்தால் உறுதியாகப் பிடித்து நிறுத்துவதே தவமாகும். இதனை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ, தொடர்ந்தோ செய்யப்படும் தீவிர பயிற்சியின் மூலம் சாத்தியமாக்கலாம். தவம் பற்றிய திருவள்ளுவரின் கருத்துகள் சிந்திக்க வைப்பவை.

'உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய் யாமை
அற்றே தவத்திற் குரு.'



தனக்கு வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுவதும், மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது இருப்பதுமே தவத்தின் வடிவமாகும் என்கிறார். மேலும் வள்ளுவரின் தவம் என்ற அதிகாரத்தின் தொகுப்பினை பார்க்கலாம். துறவு வாழ்வு மேற்கொள்ளுபவர்களுக்கு உணவு முதலியவைகளைக் கொடுத்து உதவ வேண்டியிருப்பதால், தாம் துறவு மேற்கொள்ள மறந்தார்களோ? பொதுமக்கள் என்று நினைவுபடுத்துகிறார். தவ வலிமையால் பகைவரை வெல்லுதலும், நண்பர்களை உயர்வடையச் செய்வதலும், நினைத்த அளவில் சாத்தியமாக்கலாம். இதனை இப்பிறவியிலேயே முயல வேண்டும். தவம் செய்பவர்கள் தம் செயலை, கடமையைச் செய்பவர்களாகவும், மற்றவர் ஆசை வலையில் சிக்கி, முயன்றும் தோல்வியில் முடிவதைக் காண்பர். கொல்லன் உலையில் மின்னும் பொன் போல, துன்பம் வருத்தினும், தவம் செய்வார் தன்னுணர்வில் ஒளிர்வர். இவ்வாறு தன்னை உணர்ந்தவனில் காணும் ஒளிர்வு (தேஜஸ்), மற்ற உயிர்களும் தொழும்படியாக, மதிக்கும் படியான நிலையைத் தரும். உலகில் ஆற்றல் இல்லாதோர் பலராக இருப்பதற்குக் காரணம், தவம் செய்பவர் சிலராகவும், செய்யாதவர் பலராகவும் இருப்பதே.

விவேகானந்தரின் வாழ்வில் பல நிகழ்வுகள் அவரின் பிரமச்சரிய வலிமையால் ஏற்பட்டவை என்பதை அவரே கூறியிருக்கிறார். பெரிய நூல்களின் பக்கங்களை வேகமாகத் தாண்டிச் செல்வதாக மற்றவர்கள் நினைத்து அவரை சோதித்துப் பார்க்க கேள்விகள் கேட்ட போது, எவ்வித தவறுகளும் இன்றி படித்த விடயங்களைக் கூறி பலரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கினார். ஐக்கிய நாடுகள் சபையில் அவரின் உரைக்கு கிடைத்த மாபெரும் வரவேற்பு தனது பிரமச்சரிய வலிமையினால் ஏற்பட்டது என்று கூறியிருக்கிறார். பிரமச்சரியம் தீவிரமான மனக்குவிப்பை மட்டுமின்றி, முகத்தில் மலர்வையும் (தேஜஸ்) விவேகானந்தரிடம் ஏற்படுத்தியிருந்தது.

தவம் என்பதற்கு தகித்தல், எரித்தல் என்று பொருள் கூறலாம். எதனை எரித்தல்? மனதின் அழுக்குகளை எரித்தல், யாருக்கும் துன்பம் செய்யாதிருத்தல் என்று தன்னையே தூய்மைப்படுத்தல். ஆன்மீக வளர்ச்சிக்காக மனம், வாக்கு, காயத்தினால் செய்யப்படும் சாதனைகளைத் தவம் எனலாம். நாம் செய்யும் பல்வேறு பிராணாயாமங்கள் மூலம் மனம் தூய்மையடைகிறது. உடலை வருத்த மனம் ஒருமுகப்படும் நிலை ஏற்படுகிறது. மனமானது விருப்பு-வெறுப்பு, வெற்றி-தோல்வி, சூடு-குளிர், இன்பம்-துன்பம் போன்ற இருமைகளின் கூடாரமாக இருக்கிறது. இதிலிருந்து வெளியேறி சமநிலையுடன் எதனையும் அணுகக் கூடிய யோக வாழ்வுக்குத் தவக்கோலம் வழிவகுக்கிறது. கிரியா யோகமானது மனதை பட்டைதீட்டி, தூய்மையாக்கி, ஒளிர வைப்பதன் மூலம் தன்னை உணரும் நிலைக்குத் தயாராக்கி, உயர்த்தி விடுகிறது. மனதைக் கருவியாகக் கொண்டே, மனதை வெல்வதன் மூலம் மனதைத் தாண்டிய அனுபவத்தைப் பெற வேண்டும். மனம் அடங்குதல்தான் துறவு வாழ்க்கைக்கு முதல்படி. தவமென்பது சுய ஒழுக்கம், கட்டுப்பாடு, சமநிலை, இருமைகளின் பாதிப்பில் இருந்து விலகிய நிலை.



கிருஷ்ணரின் உபதேசத்தின் பெயரில் மனம் அமைதியடைந்து செயலின் விளைவில் பற்றின்றி பாரதப் போர் புரிந்த அர்ஜூனன் கர்ம யோகியே. மனம், வாக்கு, காயங்களினால் நாம் செய்யக்கூடிய தவங்களை பகவத் கீதையில் 17 ஆவது அத்தியாயத்தில் காணலாம். கடவுளை, ஆன்மீக குருவை, பெற்றோரை, பெரியோரை வணங்குதலும் மரியாதை செய்தலும் வேண்டும். உள்ளும் புறமும் தூய்மையைக் கடைப்பிடித்தலும் நடத்தையில் எளிமையும். விரதம் இருப்பது கூட அக, புற தூய்மைக்கு வழிவகுக்கிறது. திருமண உறவெனும் பிரமச்சரியம் மற்றும் அகிம்சை. இவை யாவும் உடல் அல்லது காயத்தால் செய்யும் தவங்களாகும். உண்மையான பேச்சு, இனிமையான பேச்சு, நன்மை விளைவிக்கும் பேச்சு, பேச்சில் சிக்கனம், பிறர் மனம் நோகாத பேச்சு, ஆன்மீக இலக்கியங்களை முறையாக உரைத்தல் என்பன வாக்கின் தவங்களாகும். புலன் உணர்வுகளில் இருந்து விடுதலையும் அதனால் ஏற்படும் திருப்தியும், எண்ணங்களில் இருந்து விடுதலை பெற்று மௌனத்தில் நிலை பெறுதல், நம் நடவடிக்கைகளில் ஒளிவு மறைவின்றி இருப்பதன் மூலம் தூய்மையைப் பேண முடியும், இவற்றின் முடிவில் பிறரின் நலனில் ஏற்படும் ஈடுபாடு என இவை யாவும் மனதின் தவங்களாகும் என பகவத்கீதை கூறுகிறது.

தவத்தில் ஈடுபடாவிடில் என்னவாகும் என்பதற்குப் பதிலாக வரும் திருமந்திரப் பாடலைப் பார்ப்போம்.

"மனம் வாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மன வாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி ஆற்றத்தகும் ஞானி தானே"
- திருமந்திரம்

நம்மை வினைத்துன்பங்கள் வந்தடைவதற்கு, மனம், வாக்கு, காயத்தால் விளையும் கோபம், பயம், ஆசை, மயக்கம் போன்றவையே காரணமாகின்றன. நம் முறையான தவ செயற்பாடுகள் மூலம் இவற்றைத் தவிர்ப்பதால் வினைப்பதிவுகளை (கர்மா) வென்ற தவஞானி ஆகலாம்.

சஞ்சித கர்மம் எனும் முற்பிறவியில் இருந்து தொடர்ந்து வரும் வினைப்பதிவுகளும், பிரார்த்த கர்மம் எனும் குறிப்பிட்ட பிறவியில் செயற்படத் தொடங்கியுள்ள வினைப் பயன்களும், ஆகாமிய கர்மம் எனும் இப்பிறவியில் புதிதாகச் சேர்ந்து கொள்கின்ற வினைப்பதிவுகள் என்று மூன்று வகையானவை எமது வினைகள். பிராயச்சித்தம், மேல் பதிவு, தேய்த்தழித்தல் (Expiation, Superimposition, Dissolution) என்று கருமப் பதிவுகளை நீக்கிக் கொள்ள மூன்று வழிகள் இருப்பதாகக் கூறுகிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி. இவற்றில் தேய்த்தழித்தல் என்பது குண்டலினி யோக தவத்தினால் மட்டுமே சாத்தியமாகும் என்கிறார்.

பதஞ்சலி முனிவர் வரையறுக்கும் கிரியா யோகத்தின் அடுத்த கூறு 'சுய அறிதல்' அல்லது 'நான் யார்' என்ற ஞானத் தேடலாகும். நம் தினசரி வாழ்வின் ஒரு பகுதியாக இந்த தேடல் அமையும் போது விடைகளையும் தேடிக் கண்டு அடையலாம். நான் யார்?, எங்கிருந்து வந்தேன்?, எங்கு செல்கிறேன்?, இவ்வுலகில் எனக்கு உரிமையானது எது?, உலகியலில் பற்று கொண்டவனா? இல்லை 'எல் லாம் அவன் செயல்' என்று செயலின் பயனில் உரிமை பாராட்டாது, விழிப்பு நிலையில் ஆனந்தித்து இருப்பவனா?. எந்த கடமையையும் சமநிலையில் நின்று செய்கின்றேனா?, தனது நற்பண்புகளில் மயங்குவதை விட திருத்தப்பட வேண்டிய குணங்களில் கவனம் செலுத்துகிறேனா?. இது போன்ற முக்கியமான கேள்விகளை எம்மை நோக்கிக் கேட்க வேண்டும். இது தவிர வாழ்வின் பிற சிறிய செயல்கள் கூட நம் சுய அறிதலுக்கு துணை நிற்கும். சாத்வீகமான உணவுப் பழக்கவழக்கம், தினசரி தியானம், நேரத்தை வீணடிக்காமை, இயல்பாக எளிமையாக இருத்தல், நாள் முழுதும் மனதைக் கவனித்தல் இவற்றில் சில. ஞான யோகம் என்றதும் நமக்கு உடனடியாக ஞாபகம் வருவது ரமண மகரிஷியின் 'நான் யார்' என்ற ஆன்ம விசாரணைதான்.

கிரியா யோகத்தின் வரைவிலக்கணத்தில் இறுதியாக வருவது 'ஈஸ்வர பிரணிதானம்' அல்லது செயலின் பயனை இறைவனுக்கு அர்ப்பணிக்கும் சரணடைதல் அல்லது பக்தி. துன்பம், செயல், செயலின் பயனால் பாதிக்கப்படாத அந்த விசேட புருஷன், ஈஸ்வரன் எனப்படுகிறார். அந்த யாவருக்கும் பொதுவான இறையிடம் தெய்வீக அன்பினால் சரணடைதல் பக்தி ஆகிறது. ஆணவம், பயம், புகழ், பெருமை, பற்று, கோபம் போன்ற மனதின் விருத்திகளுக்குத் தீனி போடும் செயற்பாடுகள் நமது பூரண சரணாகதிக்குத் தடையாக உள்ளன. பக்தியை நாம் படிப்படியாக பல வகைகளில் வளர்த்து வரலாம். ஒன்பது வகையாக பக்திகள் கூறப்படுகின்றன. பெரியவர்களிடம் கேட்டல் மூலமாகவும், ஆன்மீக நூல்கள் மூலமாகவும் வளர்த்துக் கொள்ளும் சரவண பக்தி. பக்தி பாடல்கள், மந்திர உச்சாடனங்கள் மூலமான கீர்த்தன பக்தி. இறைவனை எந்நேரமும் நினைந்துருகும் சமரண பக்தி. அன்பினால் செய்யும் சேவைகள் மூலம் சேவா பக்தி. உள்ளும் புறமும் அர்ச்சித்தல். அகமும் புறமுகாகத் தொழுதல். இறைவனுக்கு அடிபணிந்து தொழுது, அவன் செயல்களைச் செய்வதான தாச பக்தி. நண்பனாய் இறைவனைக் கருதும் சாக்கிய பக்தி. இறுதியாக முற்றிலும் சரணாகதியாகும் ஈஸ்வர பிரணிதானம். பக்தி மார்க்கத்தில் முற்றிலும் சரணடைந்து முத்தியடைந்த பல நாயன்மார்களின் கதைகளையும், மீராபாயின் கிருஷ்ண பக்தியையும் நாம் அறிவோம்.

தவமும் ஞானமும் இறைபக்தியும் உள்ளடங்கிய கிரியா யோகம் பழமையானது. மனிதனைப் பூரணப்படுத்துவது. திருமூலர் பாடல் ஒன்று,

தான் தவம் செய்வதாம் செய்தவத்து அவ்வழி
மான் தெய்வமாக மதிக்கும் மனிதர்கள்
ஊன் தெய்வமாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான் தெய்வம் என்று நமன் வருவானே!
(திருமந்திரம் - 257)

இல்லறவாசிகளுக்குத் தவத்தின் அவசியத்தைத் திருமூலர் சிறிது நகைச்சுவையுடன் இங்கு கூறுகிறார். தவமும் பக்தியும் சரணாகதியும் ஒருவனை இறைவனுக்கு அருகில் அழைத்துச் சென்று, உலகியலுக்கு அப்பாற்பட்ட அனுபவத்தை வழங்குகிறது. உடலைத் தெய்வமாகப் பிழையாக நினைத்து இன்ப, துன்ப நுகர்வுகளால் இறப்பைத் தானாக வரவழைத்துக் கொள்பவனுக்கு, ஒரு நாள் யமன் வந்து 'நான் தான் கடவுள்' என்று அழைத்துச் சென்று விடுவான் என்கிறார். வள்ளுவரின் குறளில் முன்னர் பார்த்தது போல் தவம் செய்து ஆற்றலை அதிகரித்துக் கொண்ட மக்களைக் கொண்ட சமுதாயத்தின் அரசியல், கல்வி, பொருளாதாரம், சமூகநீதி எப்படி இருக்கும்? வாசகர்களின் கற்பனைக்கு விட்டு விடலாம்.

**முரளீதரன் நவரத்தினம்**
MSC in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)



# மண்வளம் பேணும் பயிர் சுழற்சி முறை

க.பிரியங்கா
விவசாய பீடம்

நாட்டின் மிக முக்கியமான புதுப்பிக்க இயலா இயற்கை வளம் மண் ஆகும். மண்வளம் உயிரினங்களின் வாழ்வாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. மண்வளம் என்பது மண்ணின் பௌதீக மற்றும் இரசாயனக் குணங்கள் பயிர் வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைவதேயாகும். மண்ணின் பௌதீகக் குணங்கள் சீராக அமைந்தால் தான் பயிர் வளர்ச்சிக்கு உகந்த அனைத்து இரசாயன மாற்றங்களும் முறையாக நடைபெறும். மண்ணின் பௌதீக குணங்களாவன மண்நயம், மண்ணின் கட்டமைப்பு, மண்ணில் நீர் ஊடுருவும் திறன், நீர் உட்புகும் திறன், நீர் கொள்திறன், மண்ணின் நுண்துளை இடைவெளி, மண்ணின் வெப்பநிலை, மண்ணின் காற்றோட்டம் ஆகிய அனைத்து பௌதீக குணங்களும் சீராக அமையுமேயானால் தாவரங்களின் வேர் வளர்ச்சி, தண்டு வளர்ச்சி மற்றும் பயிர் விளைச்சல் ஆகியன கணிசமான அளவில் அதிகரிக்கும்.

நாட்டில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலை இன்று நிலவி வருகின்றது. மேலும் விளை நிலங்கள் யாவும் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்காக அழிக்கப்படுவதினால் விவசாயத்திற்குத் தேவையான நிலங்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. இத்தகைய நிலையில் குறைந்த நிலத்தில் அதிக உற்பத்தியை பெருக்குவதற்குத் தொடர்ந்து பயிர் செய்ய நேரிடுகிறது. இதனால் மண் வளம் குறைந்து கொண்டே வருகிறது. அதாவது பயிர்ச் சத்துகள் நிலத்திலிருந்து வீணாவது மட்டுமல்லாமல் மண்ணின் தன்மையையும் வலுவிலக்கின்றது. மேலும் நிலம் மண் அரிமானத்தினால் பயிர்ச் சத்துகளை இழக்கப்படுவதுடன் தவறான நிர்வாகமும் நிலவளத்தைப் பாதிக்கிறது. உதாரணமாக அதிக அளவில் களைச் செடிகள் வளர்தல், குறைந்த காற்றோட்டம், முறையற்ற பயிர் செய்கை, குறைவான வடிகால் வசதி ஆகியவற்றால் மண் வளம் குறைகிறது. நம் நாட்டில் பெருகிவரும் மக்கள் தொகையின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய நிலவளத்தைக் காப்பாற்றவும் பெருக்கவும் அவசியம் ஏற்படுகிறது.

குறிப்பாக ஒரே வகையான பயிர்களை ஒரே இடத்தில் தொடர்ந்து பயிரிடும் பொழுது மண்ணிலிருந்து ஒரே வகையான ஊட்டச் சத்துக்கள் தொடர்ந்து எடுக்கப்படுவதனால் குறிப்பிட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு மண்ணில் உருவாகும். இது தீங்கு விளைவிக்கும் பூச்சிகளும் பூஞ்சணங்களும், நுண்ணுயிர்களும் நிலத்தில் பெருகி பயிருக்குப் பல நோய்கள் ஏற்பட வழிவகுக்கும் அத்துடன் இரசாயன இடு பொருட்களின் தேவையை ஒவ்வொரு சாகுபடியிலும் அதிகரிப்பதால் பயிர் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது.

ஒரு நிலத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பயிர் வகைகளை ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் ஒன்றன்பின் ஒன்றாக ஒரு குறிப்பிட்ட திட்டப்படி சாகுபடி செய்யலாம். இதுவே பயிர்ச் சுழற்சி முறை எனப்படும்.

**பயிர்ச் சுழற்சிகான பொது விதிகள்**

மண்ணின் தன்மை, தட்பவெட்ப நிலை பருவம், விளையும் பொருள், விளையும் பொருளை விற்பதற்கான சாத்தியங்கள் ஆகியவற்றிற்குப் பொருத்தமான பயிர்களையே பயிர்ச் சுழற்சியில் சேர்க்க வேண்டும்.

பயிரின் குடும்பம், வர்க்கம், பயிரின் கால அளவு, தாவர வேரின் வகை போன்றவை பயிர்ச் சுழற்சி முறை திட்டமிடும் போது கருத்தில் கொள்ள வேண்டும்.

மண்வளத்தைப் பெருக்குதல் அல்லது பாதுகாத்தல், மண் அரிப்பைத் தடுத்தல், களைகளைக் கட்டுப்படுத்துதல், பூச்சிகளையும் நோய்களையும் தடுத்தல் ஆகியவற்றின் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்ப பயிர்ச் சுழற்சி முறையை நிர்ணயிக்க வேண்டும்.

**பயிரினைத் தேர்வு செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்**

பயிர்ச் சுழற்சி முறையில் பல்வேறுபட்ட பயன்களைத் தரும் பயிரினங்களைத் தெரிவு செய்ய வேண்டும். உதாரணமாக உணவு, தீவனம், விறகு மற்றும் மருத்துவம் பொதுவாக பயிர்ச் சுழற்சி முறையில் கீழ்க்காணும் வகைகளாகப் பிரிக்கலாம். தீவனப் பயிர்கள், அவரை இனப்பயிர்கள், மரக்கறிவகை செடிகள், நெருக்கமாக விதைத்துச் சாகுபடி செய்யப்படும் சிறுதானியப் பயிர்கள்.

அவரை இனத் தாவரத்தைத் தொடர்ந்து வரிசையில் நட்டுச் சாகுபடி செய்யப்படும் பயிரையும் அதை அடுத்து நெருக்கி விதைத்துச் சாகுபடி செய்யப்படும் தானியப் பயிரையும் சாகுபடி செய்ய வேண்டும்.

வேர் வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு பயிரினைத் தேர்வு செய்ய வேண்டும். உதாரணமாகக் குறுகிய வேர்ப் பகுதியினை உடைய நெல் சாகுபடி செய்யப்பட்ட பின் நீண்ட வேர்ப் பகுதியினைக் கொண்ட காய்கறிச் செடிகள், பருத்தி அவரை போன்ற பயிர்களைத் தேர்வு செய்யலாம். இவ்வாறு தேர்வு செய்வதால் மண்ணின் எல்லாப் பகுதியிலும் உள்ள ஊட்டச் சத்துக்களையும் பயன்படுத்தும் நிலை ஏற்படுகிறது.

மட்டுப்படுத்தப்பட்ட நீர் வசதியுடைய அல்லது உலர் வலய பிரதேசங்களில் வரட்சிக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய பயிர்களையும் பயன்படுத்தல் வேண்டும்.

ஊட்டச்சத்துக்களை மண்ணிலிருந்து எடுக்கும் பயிர்களுக்குப்பின் ஊட்டச் சத்துக்களை மண்ணிற்குக் கொடுக்கும் அவரையின வகைப் பயிர்களில் (பயறு, உழுந்து) ஏதாவது ஒன்றைத் தேர்வு செய்ய வேண்டும். ஏனெனில் அவை மாத்திரமே வளி மண்டலத்திலுள்ள நைதரசனை தனது வேர் முடிச்சுகளிலுள்ள ரைசொபியம் (rhizobium) என்ற பக்ரீரியாவின் உதவியால் மண்ணிற்குக் கொடுக்க முடியும்.

ஒவ்வொரு வகைப் பயிர்களுக்கும் குறிப்பிட்ட சிலவகை ஊட்டச்சத்துக்களை அதிகப்படியாகப் பயன்படுத்தும் குணம் உண்டு. ஆகவே, ஒவ்வொரு முறையும் வெவ்வெறு வகைப் பயிர்களை சாகுபடிக்குத் தேர்வு செய்வதால் பெரும்பாலான ஊட்டச்சத்துக்கள் சமச்சீரான அளவில் பயன்படுத்தப்படும் நிலை உருவாக்கப்படுகிறது.

நிலத்திற்குப் பயிர்ச் சத்துக்களைக் கொடுக்கும் தன்மை பெற்றிருக்க வேண்டும். உதாரணமாக பசுந்தாள் உரச்செடிகள்.

**நன்மைகள்**

ஒரு நிலத்தில் திரும்பத் திரும்ப வெவ்வெறு பயிர்கள் சாகுபடி செய்யப்படும் பொழுது பயிர் ஊட்டச்சத்துக்கள் மண்ணில் குறையாமல் இருக்க வழி செய்கின்றது.

அலகு நிலப்பரப்பில் இருந்து கிடைக்கும் விளைச்சல் அதிகரிக்கும்

பயிர்ச்சுழற்சி முறைகளைகளையும் பூச்சிபீடைகளையும் கட்டுப்படுத்த உதவும்.

மண்ணின் எல்லாப் பகுதியிலும் உள்ள ஊட்டச் சத்துக்கள் பயன்படுத்தும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதாவது மேல் மட்ட மண்ணிலுள்ள பயிர்ச் சத்துக்களும் கீழ்மட்ட மண்ணிலுள்ள சத்துக்களும் பயிர்களால் பயன்படுத்தப்படும். நாருரு வேர்களையுடைய பயிர்கள் மேல்மட்ட மண்ணிலுள்ள உணவுச் சத்துக்களை ஆணிவேர்ப் பயிர்கள் கீழ்மட்ட மண்ணிலுள்ள சத்துக்களையும் பயன்படுத்தும்.

பசுந்தாள் உரப்பயிர் பயிர்ச் சுழற்சியால் இருக்கும் பொழுது தழைச்சத்தும் / கரிமப்பொருட்களும் கணிசமான அளவில் கிடைத்து நிலவளம் பெருகும்.

பயிர்ச்சுழற்சியால் தானியப்பயிர், வியாபாரப்பயிர், பசுந்தாள் உரப்பயிர் முதலியவையை சேர்த்துக் கொண்டால் உணவுக்கு வேண்டிய தானியம், தொடர்ச்சியான வருமானம், கால் நடைகளுக்கு வேண்டிய தீவனம் மற்றும் நிலத்திற்கு வேண்டிய உரம் ஆகிய அனைத்தும் பண்ணையில் சாகுபடி செய்யப்படும் பயிர்களிலிருந்தே கிடைப்பதற்கு வழிவகுக்கிறது.

நிலத்தின் பௌதீகத் தன்மையைச் சாதாரணமான முறையில் நிலைபடியச் செய்கிறது.

இது மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகிறது - வலுவான, ஆழமான வேர்களைக் கொண்டுள்ள பயிர்களால் வன்மையான மண்படை உருவாகுவதைத் தடுக்கப்படுவதோடு மெல்லிய, ஆழமற்ற வேர்களைக் கொண்டுள்ள பயிர் மேற்பரப்புக்கு அருகில் உள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சி மண்ணைப் பிணைக்கின்றன. அவை பல சிறிய துளைகளை உருவாக்குவதன் மூலம் வளி மற்றும் நீர் மண்ணில் சேர வழிவகைக்கிறது.

சரியான பயிர் இனங்களை தெரிவு செய்வதன் மூலம் மண் அரிப்பைத் தடுக்க உதவுகிறது.

அவரை குடும்ப வகைகளைப் பயிர் செய்வதால் நிலத்திற்கு நைதரசன் போதுமான அளவில் சேர்ப்பிக்கப் படுகிறது.

எருக்களையும் உரங்களையும் சிக்கனமான பலனுள்ள முறையில் பயன்படுத்த பயிர்ச்சுழற்சி பயன்படுகிறது. ■






# நிலைக்கண்ணாடி

# நமக்குக் கிடைத்த ‘வாழ்க்கை’ எனும் அரிய வாய்ப்பினை முழுமனதோடும் ஈடுபாட்டுடனும் பயன்படுத்துவோம்

தரிசனன்

நாம் அனைவருமே இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது வாழ்க்கை நாமாகத் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்ட ஒன்றல்ல. நாம் நினைப்பது போல, அல்லது திட்டமிட்டது போல நகர்த்திச் செல்வதும் இலகுவல்ல. அது தன் போக்கில் தனக்குப் பிடித்தமான விதத்தில் எம்மை ஆட்டுவித்துக் கொண்டு போகும். வாழ்வில் பல பல சந்தர்ப்பங்களில் இதை இப்படிச் செய்ய வேண்டும், அதை அந்த விதமாக அடைய வேணடும் என மனசார நாம் ஆசைப்பட்டு இருந்தாலும் பல விஷயங்கள் நாம் நினைத்திராத விதமாகத்தான் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. மனமானது பல பல கற்பனைகளோடு ஒரு விசயத்தை அணுகும் - நமது அறிவு பல பல விதமாகத் திட்டமிடும். ஆனால், எமது கட்டுபாட்டுக்குள் இல்லாத புறச்சூழலும் பிற பல காரணிகளும் எல்லாவற்றையுமே தலைகீழாகப் புரட்டிப் போட்டு விடும். வேறு விதமான ஒரு கோலத்தை நம் கண்முன் அனுபவமாகப் பரவி நிற்கச் செய்யும். இதுவே பலரது வாழ்க்கையாய் நிகழ்ந்தேறிக் கொண்டிருக்கிறது. அதன்படியே நாமும் வாழத் தலைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இருந்தாலும் பல காரியங்கள் முழு வெற்றியாகவும் சில காரியங்கள் நிறைவேறும் தன்மையானதாகவும் அமைந்து விடுவதுண்டு. அது போலவே சில முயற்சிகள் பல எதிர்பார்ப்புகளுடனும் இழப்புகளாகவும் ஏமாற்றங்களாகவும் நடந்து முடிவதுண்டு. இத்தகைய நிலையில் பலரும் மனங்கசந்து போய்வாழ்க்கையைச் சபித்து ஒதுக்கி விடுபவர்களையும் விரக்தியில் ஏனோ தானோ என வாழத் தலைப்படுபவர்களையும் சில சமயங்களில் தோற்றோடிப் போய் நமது வாழ்வுக்கு முடிவு தேடிக் கொள்ள முனைபவர்களையும் நாம் பார்க்க நேரிடுவதுண்டு. இவ்வாறான நிலையில் தான் நாம் பல விடயங்களைக் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்த உலகில் நாம் இன்னாருடைய மகளாக அல்லது மகனாக இந்த இடத்தில் இவ்வாறான ஒரு காலத்தில் வந்து பிறக்க வேண்டும் என எண்ணித் திட்டமிட்டுப் பிறக்கவில்லை. ஏதோவொரு சக்தி - ஒரு இயற்கையின் இயங்கு விதி எம்மை இங்கே மானிடர்களாகப் பிறக்க வைத்திருக்கிறது. நண்பர்களை, சொந்தபந்தங்களைக் கூடக் காலமே நமக்கு அறிமுகம் செய்து வைக்கின்றது. இவ்வாறான அனுபவம் எல்லாம் நமக்கு எதை உணர்த்துகின்றது என்பது பற்றி நாம் சிந்திப்பதுண்டா?

எமக்கு இப்போது கிடைத்த வாழ்க்கை, எத்தகையதாகினும் அரிய பெரும் வாய்ப்பு என்றும் அதனைச் சீராக, திட்டமிட்டு வாழ வேண்டும் என்றும் நம்மில் எத்தனை பேர் நினைத்துப் பார்க்கின்றோம்? வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் எமக்கு மீளக்கிடைக்காது பெறுமதியான பொழுதுகள் என்பதை எத்தனை பேர் உணர்கின்றோம்? நிகழ்ந்து முடிந்த சம்பவங்களை மீட்டுப்பார்க்கும் கால இயந்திரம் எம்மிடம் இல்லை. நாம் செய்த காரியம் தவறாகப் போனால் மீளவும் அங்கு சென்று சீர் செய்ய முடியாத பொறிமுறையாலேயே காலமும் எமது வாழ்வும் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இதனால், செய்யும் செயலைத் திட்டமிட்டு சரியானதாகச் செய்ய வேண்டும். தவறு இழைத்துவிட்டு பின் இறைஞ்சிக் கொண்டிருப்பதில் பயன் எதுவும் இல்லை.

எதிர்பார்த்திராத ஒரு அதிசயம் போல் நமக்கென அமைந்துவிட்ட வாழ்க்கையை நமக்கென அமைந்த மனோபாவங்களின் படி எமது மனச்சான்றின் ஆதரவின் படி முடிந்த வரை வாழ்ந்து பார்த்துவிடும் உத்வேகத்தை நாம் நமது மனங்களில் ஊற்றிக் கொள்வோம். எதிலுமே ஆழமாய் மனதைத் தோய்ந்து வேதனைகளாகவும் கவலைகளாகவும் நம்மை நாமே வருத்தி அழித்துக் கொள்ளாமல் முடிகிற வரை அர்த்த பூர்வமாய் எமது உள்மனம் ஏற்றுக் கொள்கின்ற விதமாய் அடுத்தவர் எவர்க்கும் நோதலுக்கோ வருந்தலுக்கோ காரணமாகாமல் இருக்கப் பழகுவோம். அறிவை இருளால் மூடிக் கொள்ளும் சுயநல உணர்வுகளுக்குப் பலியாகிச் சிறுமைப்படாமல் எதிலுமே ஆழமாய் ஒட்டுதல் இன்றி எமது வாழ்க்கையையே நாம் சற்று விலகி நின்று பார்ப்பதற்குப் பயின்று கொள்ளலாம். நம்மை நாமே அவதானிப்போம் கூர்ந்து பார்ப்போம் நமக்கெதிராக நம்மிடமிருந்தே உருவாகும் எதிலிருந்தும் நம்மை நாமே காத்துக் கொண்டு நகர்வதோடு வாழ்க்கை எனும் சுவாரஸ்யமான அனுபவத்தை ஒரு ரசனையோடு எதிர்கொள்வோம். ■



# அணையில் மிதக்கும் சூரிய மின் பண்ணை!

தாய்லாந்து விரைவில் சூரிய ஒளி மின்சாரத் தயாரிப்பில் சாதனை படைக்கப்போகிறது. அங்குள்ள சிரிந்தோர்ன் அணைக்கட்டின் நீர் பரப்பின் மீது ஒரு மிதக்கும் சூரிய மின் பலகை பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத, 1.45 லட்சம் சூரிய ஒளித் தகடுகள், அந்த நீர்த் தேக்கத்தின் மீது மிதக்கும் படி வைக்கப்பட்டுள்ளன. அவை சூரிய ஆற்றலைச் சேமித்து, 45 மெகாவாட் மின் சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை. நீர்த் தேக்கத்தின் மேற்பரப்பில் வெறும் ஒரு சதவீதம் மட்டுமே சூரியப் பலகை மிதவைகளால் மூடப்பட்டுள்ளது.

எனவே, அணையின் நீர் மற்றும் அதில் வாழும் மீன் இனங்களுக்கு எந்தப் பாதிப்பும் வராது என இத்திட்டத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.குளிர்ந்த நீரின் மீது மிதக்கும் சூரியப் பலகைகள், வெப்ப காலத்தில் அதிகம் சூடேறுவது தவிர்க்கப்படும். மேலும் மின் உற்பத்தி விகிதமும் 10 முதல் 15 சதவீதம் அதிகரிக்கும் என இத்திட்டத்தின் பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்னொரு பக்கவிளைவாக, சிரிந்தோர்ன் அணைக்கட்டின் நீர் இருப்பு ஆவியாவது ஆண்டுக்கு 4.6 லட்சம் கனமீற்றர் அளவுக்குத் தடுக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, தாய்லாந்தின் காற்றில் ஆண்டுக்கு 24 ஆயிரம் டன்கள் பசுமைக்குடில் வாயுக்கள் கலப்பது தடுக்கப்படும் என, தாய்லாந்து மின் உற்பத்தி ஆணைய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். ■

# பூச்சி விரட்டும் மருத்துவ உடைகள்!




இரவில் உறங்கும் போது கொசுக்கடி உட்பட பல பூச்சிக்கடிகளிலிருந்து தப்பிக்க ஒரு புதிய துணி வகையை ‘வி டிரிப்டர்ஸ்’ என்ற உடைத் தயாரிப்பாளர்கள் உருவாக்கியுள்ளனர். பிரிட்டனைச் சேர்ந்த வி டிரிப்டர்சின் நிறுவனர் நாடியா சால்மன், தெற்காசிய நாடுகளில் பயணித்த போது கொசுக்கடி, பூச்சிக்கடியால் மிகவும் அவதியடைந்தார். இதற்கென விற்கப்படும் பூச்சி விரட்டிகள் ஒவ்வாமையைத் தருபவையாக இருந்தன.

அப்போது தான், தெற்காசியப் பகுதியில் மூங்கில் இழைகளால் துணி நெய்யும் கலையைக் கண்டறிந்தார். இயற்கையிலேயே மூங்கில் இழைஉடைக்கு கிருமி நாசினித் தன்மை உண்டு. தவிர வெப்பத்தைத் தடுக்கும் திறனும் உண்டு. எனவே இந்த இழையில் கொசு விரட்டி மற்றும் பூச்சி விரட்டிகளைத் தோய்த்துத் தைத்தால், அது மிகச் சிறந்த இரவு உடையாக இருக்கும் என்பதை நாடியாக் கண்டறிந்தார்.

பிரிட்டனுக்கு வந்ததும் அதை வைத்து உடைகளை வடிவமைத்தார். கொசு வந்து அமர முடியாதபடி உடலை மூடும் வகையில் அந்த உடை இருந்தது. படுக்கை விரிப்பு, தலையணை உறை போன்றவற்றையும் மருத்துவ குணமுள்ள மூங்கில் இழை துணியால் தயாரித்து விற்கிறது, வி டிரிப்டர்ஸ். இயற்கையான மூங்கில், இனிய தூக்கத்திற்கும் வழிவகுக்கிறது. ■

# கடவுளப்பா...

வேதநாயகம் தபேந்திரன்




"இண்டைக்கு காசு அவசரமாகத் தேவை. ஞாயிற்றுக்கிழமை என்பதால் பாங்க் பூட்டு. நாளைக்குத்தான் போய் காசு எடுக்கலாம். இப்ப காசுத் தேவைக்கு என்ன செய்யலாம்?"

இப்படியான சம்பாசணைகளை இடையிடையே கடந்து செல்கிறோம்.

இலத்திரனியல் பணப் பரிமாற்ற உலகை நோக்கி நாடு பயணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் வங்கிக்கு நேரே போய்க் காசு எடுப்பது, காசை வைப்புச் செய்வதுதான் பாதுகாப்பு என நினைக்கும் மக்கள் கூட்டம் பெரிதாகத்தான் உள்ளது.

ஒவ்வொரு 100 இலங்கையரிலும் 32 பேர் கணனி அறிவை உடையவர்களாகவும், 46 பேர் டிஜிற்றல் கல்வி அறிவு உடையவர்களாகவும் இருப்பதாக அரசாங்கப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதிலிருந்தே இலத்திரனியல் பணப் பரிமாற்ற உலகை நோக்கி அதாவது ரூபா சத நாணயத்தைக் கைகளால் தொடாத உலகை நோக்கி இலங்கையர்கள் நகர்வது பெரும் சவாலுக்கு உரியது எனப் புரிகின்றது.

வங்கிகள் அறிமுகம் செய்துள்ள ATM, CRM, CDM, KIOSK இயந்திரங்களில் பணப் பரிமாற்றம் செய்வதற்குப் பயந்து கொள்ளும், மக்கள் தொகையும் கணிசமாக உள்ளது.

பணப்பரிமாற்றத்தை இலத்திரனியல் அட்டை மூலமாகச் செய்வது பாதுகாப்பற்றது. அதனைப் பணப் பரிமாற்ற இயந்திரத்தினுள் செலுத்திக் கடவுச் சொல் இலக்கங்களைப் பாவித்துப் பணப் பரிமாற்றத்தைச் செய்வதைத் தெரியாத மக்கள் கூட்டம் இன்றும் அதிகமாகத்தான் உள்ளது.

வங்கிகளின் வெளிப்புறமாக உள்ள தானியங்கி இயந்திரங்கள் மூலமாகப் பணத்தை எடுப்பதற்கு வங்கியின் பாதுகாப்பு உத்தியோகத்தரை நாடுவது அல்லது அங்கு வரும் வாடிக்கையாளரை நாடுவது என்பவை நம்பிக்கையற்றது.

அவர்கள் எம்மை ஏமாற்றி விடுவார்கள். எமது கணக்கின் கடவுச்சொல் இலக்கத்தைத் தெரிந்து வைத்துத் தமது ஏ.ரி.எம் காட் மூலமாகத் தமது பணத்தை எடுத்து விடுவார்கள்.

அல்லது தமது கணக்கிலிருந்து நேர இடைவெளி விட்டு இரண்டு தரம் காசை எடுக்கலாம். அதற்குரிய செற்றிங் செய்வார்கள் என்பவை போன்ற அபிப்பிராயங்கள் பல கல்வி அறிவு குறைந்த வங்கி வாடிக்கையாளர்களிடம் உள்ளன.

இதன் காரணமாகத் தன்னியக்கப் பணப் பரிமாற்ற அட்டைகளை வங்கிகளில் பெறாமல் இருப்போரும் உள்ளனர்.

வங்கிகள் வாடிக்கையாளர்களிடம் இதற்கான விழிப்புணர்வைச் செய்வது கட்டாயமானது. இலங்கையரின் கல்வி அறிவு வீதம் 92.9 வீதமாக உள்ளது. தெற்காசியாவிலேயே மிக உயர்வானது என்ற வாதம் அறிவியல் ரீதியாகப் பொருத்தமற்றது.

எழுத வாசிக்கத் தெரிந்த சனத்தொகையே அது. இத் தொகையை வைத்துக் கொண்டு இலங்கையர் யாவரும் இலத்திரனியல் அறிவு பெற்றோர் என எடுகோள் எடுக்க முடியாது.

வங்கிகள் கியோஸ்க் - (Kiosk) எனும் பணப்பரிமாற்ற இயந்திரத்தைப் பொருத்தி உள்ளன. இதன் மூலமாகத் தொலைபேசி, மின்சாரம், குடிநீர்க் கட்டணங்களைச் செலுத்த முடியும். இந்த முறையில் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலமாகக் குறித்த சேவை வழங்கும் நிறுவனத்துக்குச் செல்வதைத் தவிர்க்க முடியும். எமது நேரம் மீதப்படுத்தப்படும். சேவைத் துண்டிப்பைத் தவிர்க்க முடியும்.

CDM - Cash Deposit Machine இயந்திரத்தின் மூலமாக எமது கணக்குக்கோ அதே வங்கியின் வேறு ஒருவரின் கணக்குக்கோ பணத்தைச் செலுத்த முடியும் அதாவது அனுப்பி வைக்க முடியும்.

CRM - Cash Recycle Machine இயந்திரத்தின் மூலமாக எமது கணக்கிலுள்ள பணத்தை மீளப்பெற முடியும். எமது கணக்குக்கோ அல்லது அதே வங்கியின் வேறு ஒருவரது கணக்குக்கோ பணத்தை வைப்புச் செய்ய முடியும்.

ATM ( Automatic Teller Machine ) இயந்திரத்தின் மூலமாக எமது கணக்கிலு ள்ள பணத்தை மீளப் பெற முடியும். லங்காபே அமைப்பில் இணைந்துள்ள வங்கிகளது கிளைகளில் எமது ஏ.ரி.எம் அட்டையைப் பயன்படுத்திப் பணத்தைப் பெற முடியும்.

வங்கிகள் தமது உலகளாவிய சேவைகளின் நவீன வடிவங்களையெல்லாம் வாடிக்கையாளர்களுக்கு அறிமுகம் செய்கின்றன. அரசாங்க வங்கிகள் தமது கிளைகளில் தங்க நகைகளை அடகு பிடிக்கும் போது குறைந்த வட்டி வீதத்தை அறிவிடுகின்றன. அதே நேரம் தனியார் நிதி நிறுவனங்கள் அதை விட இரட்டிப்பு மடங்கு வட்டியை அறவிடுகின்றன. அதற்குப் போய் தங்க நகையை அடகு வைத்த ஒருவரிடம் கேட்டேன் " ஏன் அங்கு போய் அடகு வைக்கின்றீர்கள்?"

"அவர்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையும் அடகுச் சேவை வழங்குகின்றார்கள். பேனை, கீரெக் (திறப்புக் கோர்வை) அன்பளிப்பாகத் தருகின்றார்கள். சேர் அல்லது மேடம் என்று சிரித்துக் கதைக்கின்றார்கள். அதனால்தான் போகின்றோம்" என்றார்.

தமக்கு வரும் நட்டத்தைப் பற்றிக் கூடக் கவனிக்காமல் வாடிக்கையாளரை மதிக்கும் பண்பைப் பார்த்து நிதி நிறுவனங்களை நாடும் வாடிக்கையாளர்களும் உள்ளனர் என்பதுதான் உண்மை.

இலங்கை 2019 ஆம் ஆண்டு முதல் உயர் நடுத்தர வருமான வகுப்பு நாடாக உலக வங்கியால் அறிவிக்கப்பட்டுத் தற்போது அபிவிருத்தி அடைந்த நாடு என்ற இலக்கை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாமும் அபிவிருத்தி அடைய வேண்டும்.

ஆகவே வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்வது தொடர்பான பொது மக்களின் அச்சங்கள் போக்கப்படல் வேண்டும். இதனை வங்கித் துறையினர் கவனிக்க வேண்டும். இதன் மூலமாகத் தான் 92.9 வீதமாகக் கல்வி அறிவு உள்ளது போல டிஜிற்றல் கல்வி அறிவு உடையோர் தொகையையும் உயர்வடையச் செய்ய முடியும்.

■

வடக்கில் அநாதரவாகக் காணப்படும் தெரு நாய்களுக்காக களமிறங்கியுள்ள இளைஞர்களின் செயல் பலரது பாராட்டைப் பெற்று வருகின்றது.

தன்னார்வலர்களாக இணைந்து We Feeders எனும் பெயரில் வீதியில் அலையும் அநாதரவாக நாய்களுக்குச் சமைத்த உணவினை வழங்கி வருகின்றனர்.

வடக்கின் பல பகுதிகளிலிருந்தும், இலங்கையின் வேறு மாவட்டங்களிலிருந்தும் We Feeders தன்னார்வலர்கள் இணைந்து வாயில்லா ஜீவன்களுக்காகச் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

நமது பிரதேசத்தில் நாய்கள் வீடுகளில் வளர்க்கப்பட்டு வந்தாலும் அவை குட்டி ஈனும் போது பெரும்பாலும் அவற்றில் ஆண் நாய்க்குட்டிகளை வளர்ப்பதற்காக எடுத்துக்கொண்டு, பெண் நாய்க்குட்டிகளை சந்தைகள், கடை தெருக்களில் கொண்டுவந்து விட்டுவிடுகின்றனர்.

இப்படி தாயிடமிருந்து பிரித்து வீதியில் விடப்படும் நாய்க்குட்டிகள் சில நாட்களிலேயே பசியால்



கு.கிருத்திகன்

# அநாதரவான நாய்களுக்கு உணவளிக்கும் We Feeders இளைஞர்கள்

இறந்து விடுகின்றன. வாகன நெரிசலில் சிக்கி இறக்க அல்லது ஊனமாக அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

இதைவிட வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களும் அவற்றில் ஏற்படும் தோல் நோய்கள் காரணமாக வீட்டுக்கு வெளியே அனுப்பப்படுகின்றன. சில நாட்கள் வீட்டுக்கு வெளியே வைத்து உணவு வழங்கப்பட்டாலும் தோல் நோய் தாக்கம் அதிகரிக்கும் போது மனிதர்களால் வெறுக்கப்பட்டு அந்தத் தெருவை விட்டே துரத்தப்படுகின்றன.

மற்றொரு புறம் hybrid எனப்படும் வெளிநாட்டு நாய்களின் மீதான மோகத்தால் 'ஊர் நாய்' எனப்படும் Ordinary beard (நாட்டு ரகம்) நாய்களை வீடுகளில் வளர்ப்பது குறைவடைந்து வருகின்றது. இதன் காரணமாகத் தெருக்களில் விடப்படும் Ordinary beard நாய்களைப் பாதுகாக்காது போகும் பட்சத்தில் ஊர் நாய் இனம் பெருமளவில் அழிவடைந்து விடும் அபாயம் உள்ளது.

hybrid நாய்களை விட ஊர் நாய்கள் நம் பிரதேச தட்ப வெப்பத்துக்கேற்ப பல ஆண்டுகள் நோய் தாக்கங்கள் மருத்துவ தேவைகள் ஏதுமின்றி உயிர்வாழக் கூடியன.

ஆதரவற்ற தெருவோர நாய்க்குட்டிகள், பூனைகளைக் கண்டெடுத்து அவற்றுக்குத் தற்காலிக வசிப்பிட ஏற்பாடுகளை செய்வதோடு வீடுகளில் நாய்க்குட்டிகள், பூனைக்குட்டிகள் தேவைப்படுவோருக்கு வழங்கி, அவற்றுக்கான மருத்துவ வசதிகளையும் வழங்கி வருகின்றனர்.

ஆறறிவுள்ளவர்களால் நாய்கள், பூனைகள் என்பவற்றை தெருவுக்கு அனுப்புவதாலேயே நாமும் தெருவில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டோம் என்கின்றனர் We Feeders இளைஞர்கள்.

அதைவிட இலங்கையின் வடக்குக் கிழக்கில் தற்போதிருக்கும் இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் அனைத்து மதங்களுக்கும் முற்பட்ட சைவ சமய காலப்பகுதியிலிருந்து ஊர் நாய்கள் காவல் தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபட்ட மிருகமாக இருந்து வருகிறது.



இந்து மதத்தில் 5000 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த மஹாபாரதத்தின் 18-ஆவது பர்வத்தில் தருமரின் பின்னால் சென்ற நாயின் கதை உள்ளது.

இராமாயண உத்தர காண்டத்திலும் ஒரு நாயின் கதை வருகிறது.

தமிழர்கள் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே ஊரைக் காப்பாற்றிய கோவிதன் என்ற நாய்க்கு நடுகல் வைத்தது படைத்து வந்திருக்கின்றனர்.

உலகின் மிகப் பழைய நூலான ரிக்வேதத்தில் சரமா என்ற நாயின் கதை உள்ளது. அதை கிரேக்கர்கள் ஹெர்மிஸ் HERMES என்ற கதையாகப் பயன்படுத்தினர்.

எகிப்து நாட்டில் சேத் (SET), அனுபிஸ் (ANUBIS) தெய்வங்கள் நாய் முகம் உடைய கடவுளாக வணங்கப்பட்டுள்ளன.

இது போல கிறிஸ்தவ மத புனிதர்களில் St Francis of Assisi, St.Hubert, St Eustace and St Roch போன்ற பலர் எப்போதும் நாயுடனே சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

உங்களுக்கு நன்மையுண்டான நாய்கள், பாக்கியங்கள் ஆகியவை உங்களுக்காகப் பிணைக்கப்பட்டுள்ளன குர்ஆன் 5: 4

நபி (ஸல்) இந்த நாய் தாகத்தால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறது" என அதை நீர் குடிக்கச் செய்தார். (புகாரி அறிக்கை)இஸ்லாமிய வரலாற்றின் மற்றொரு கட்டத்தில், முஸ்லீம் இராணுவம் ஒரு அணிவகுப்பில் ஒரு பெண் நாய் மற்றும் அவரது நாய்க்குட்டிகள் முழுவதும் வந்தது.

பெரும்பாலான முஸ்லீம்கள் பாதுகாப்பு, வேட்டை, விவசாயம் அல்லது ஊனமுற்றவர்களுக்குச் சேவை செய்வதற்கான ஒரு நாய் வைத்திருப்பதை அனுமதிக்க முடியும் என்று ஒப்புக்கொள்கிறார்கள். அனைத்து உயிரினங்களுக்கும் இரக்கமுள்ளவர்களாக இருக்க இஸ்லாம் அதன் பின்பற்றுபவர்களிடம் போதிக்கிறது, மேலும் அனைத்து வகையான விலங்குக் கொடூரங்களும் தடைசெய்யப்பட்டுள்ளன.

பௌத்தமத கடவுளான புத்தரின் போதனை 27

தீய கொடுங்கோலன் ஒருவன் இருந்தான். தேவேந்திரன் ஒரு வேடனாக மாறி தன்னுடன் மாதிலி என்ற நாயையும் கொண்டு அரசவைக்குள் நுளைய அந்த நாய் பெருங்குரலெடுத்து கத்த ஆரம்பித்தது.

பயந்து போன மன்னன் அதற்கு அரண்மனையில் தயாரித்த உணவு முழுவதையும் அளித்தான், அப்போதும் அது கத்துவதை நிறுத்தவில்லை. அரண்மனையிலிருந்த பொருட்கள் அனைத்தும் உணவாக அளிக்கப்பட்டாலும் அதன் சத்தம் நிற்கவில்லை.

நடுங்கிபோன மன்னன் இன்னும் எதை உண்ணக் கொடுத்தால் இதன் பசி அடங்கும் என கேட்டான்.

வேடனோ அதன் எதிரிகளின் மாமிசத்தை உண்ணும் வரை இந்த நாயின் பசி அடங்கப் போவதில்லை என்றான்.

இதன் எதிரிகள் யார்?

நாட்டில் மக்கள். பசியோடு இருக்கிறவரை இந்த நாய் குரைத்துக் கொண்டேயிருக்கும் அநீதி செய்து, ஏழைகளை நசுக்கி வருபவர்களே இதன் எதிரிகள்' மக்களைக் கொடுமைப்படுத்தி வந்த மன்னனுக்குத் தன் கொடுமைகள் யாவும் நினைவுக்கு வந்தன. அவன் உள்ளத்தில் கழிவிரக்கம் தோன்றிற்று. அவன் வாழ்க்கையிலே முதல் முறையாக நீதி, நேர்மைகளைப் பின்பற்றி அரசாள ஆரம்பித்தான். அதன் பின் நாய் குரைப்பதை நிறுத்தியது. (54)

கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பௌத்தத்தை இலங்கையில் பரவ பெரும்பங்காற்றிய அசோகனால் நிர்மாணிக்கப்பட்ட சாஞ்சி விகாரை தூபிகளில் நாய் உருவங்கள் காணப்படுகின்றன.

உலகின் பெரும்பான்மையான மதங்களிலும் இதிகாசங்களிலும் வரலாறுகளிலும் வழிபாட்டு தலங்களிலும் காணும் அதே நாய்களையே We Feeders தெருக்களில் பார்க்க நேரிடுகிறது.

காட்டு இனமாக இருந்த நாய்களை மனிதன் தனது பாதுகாப்பிற்காக வீட்டு விலங்காக வளர்க்க ஆரம்பித்த பின் பரிணாம வளர்ச்சி காரணமாக தற்போது வீடுகளிலிருந்து தெருவுக்கு விரட்டினாலும் அவை மனிதனை நம்பியே மனிதர்கள் குப்பை தொட்டியில் வீசும் கழிவுகளை உணவாக உட்கொண்டே உயிர்வாழவேண்டிய சூழ்நிலையே காணப்படுகிறது.

தெருவுக்கு விரட்டப்பட்டாலும் வாயில்லா பிராணிகள் எனப்படும் ஐந்தறிவு ஜீவனான நாய்கள் மனிதர்களுக்கு விசுவாசமாகவே இருந்து வருகின்றன.

தாம் வாழும் தெருக்களை, கடை தொகுதிகளை, சந்தைகளை, குப்பை மேடுகளை இரவுகளில் காவல் காக்க தவறுவதில்லை. வேறு இடங்களுக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்து போவதுமில்லை. பெரும்பாலும் அங்கேயே அந்தந்த இடங்களை தமது வசிப்பிடமாக எண்ணி அங்கு வந்து போகும் மனிதர்களை தமது விருந்தினர்களாக எண்ணி வாழ்கின்றன.

ஒரு உதாரணத்திற்குத் தெருநாய்களுக்கு உணவளிக்க செல்லும் போது பஸ் நிலையத்தில் பல கட்டடங்கள் இருந்தாலும் அவற்றில் ஒரு கட்டடத்தில் இருக்கும் நாய் அடுத்த முறையோ பல காலங்களின் பின்னர் பார்க்கும் போதோ அதே கட்டடத்திலேயே நிரந்தரமாக வசிப்பதை காண முடிகிறது.

மனிதர்கள் கடந்த காலங்களில் நடந்து கொண்ட விதங்களை வைத்து நட்பாக அருகில் வந்து வாலை ஆட்டும் அல்லது விலகி ஓடும் அல்லது சந்தேகத்துக்கு இடமானோரை பயமுறுத்தி விரட்டும்.


ஆதரவற்ற நாய்களுக்கு உணவு வழங்கும் பணிகளில் இன்னும் அதிக இளைஞர்கள் தன்னார்வலர்களாக இணைந்து சேவையாற்றத் தயாராக உள்ளவர்களை We Feeders வரவேற்கின்றது.

நம்பிரதேசத்தில் வாயில்லா ஜீவன்கள் மீதான ஆதரவு கரங்கள் இன்னும் அதிகப்படுத்துவதற்கான மருத்துவ ரீதியான சேவைகளை ஏற்படுத்திக் கொடுத்து வீடற்ற பிராணிகளுக்காக வீடுகளில் வளர்க்க தயாராக உள்ளவர்களிடம் நாய்கள், பூனைகளை சேர்ப்பித்தல், பாடசாலை மற்றும் பல்கலைகழகம், இளைஞர் அமைப்புக்கள் போன்றவற்றிலும் சமூகத்திலும் விளிப்புணர்வு கருத்தரங்குகள் போன்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

facebook.com/we Feeders என்ற முகப்புத்தக பக்கம் அல்லது wefeeders@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக we feeders அமைப்பை அணுக முடியும்.

இப்படியான மேன்மையான செயல்களை நம் சமூகத்தில் முன்வந்து செய்பவர்களை முடிந்தளவு ஆதரவளிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை.

■



# கல்யாணக்கனவு

## கனவு - 01

யாழ் சத்யா

தலவாக்கலை இலங்கை வங்கிக் கிளையின் அடகுப் பிரிவு. அச்சிறு அறையில் தனக்கு முன்னே அமர்ந்திருந்த அந்த நடுத்தர வயதுப் பெண் மணி கொடுத்த சங்கிலியை நகைகளின் தரம் பார்க்கும் உரைகல்லில் தேய்த்துக் கொண்டிருந்தாள் வைஷாலி.

'கொஞ்சம் மெதுவாகத் தேயுங்கோம்மா... அந்த மனுசன் கலியாணம் கட்டின அன்றைக்குக் கழுத்தில போட்டதுதான். மற்றபடி இது இங்க தானே கிடக்கு. நீங்கள் தேய்ச்சுத் தேய்ச்சே இருக்கிற மிச்ச சொச்சத் தங்கத்தையும் சுரண்டி எடுத்துப் போடுவியள் போல...'

குரலில் வேதனை வெளிப்படையாகத் தெரியச் சிங்களத்தில் கூறிக் கொண்டிருந்தார் அந்தச் சிங்களப் பெண்மணி. வேலைக்கு வந்த புதிதில் வைஷாலிக்கு இப்படியான பேச்சுக்களெல்லாம் மனசைப் பிசையும். நகையைச் சுரண்டவே தயங்குவாள். அதுவும் தாலிக் கொடி என்றால் சொல்லவே வேண்டாம். கண்கள் கலங்க அந்தப் பெண்கள் கழுத்திலிருந்து கழட்டிக் கொடுக்கும் போது இவளும் சேர்ந்து கலங்குவாள்.

இதெல்லாம் ஏழெட்டு வருடங்களுக்கு முந்தைய கதை. இப்போது இந்தத் தொழிலில் வைஷாலி பழம் தின்று கொட்டை போட்டிருக்கிறாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் இவளது புள்ளிகள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லப் போதுமானதாக இருக்கவில்லை. இவளுக்கோ திரும்பவும் பரீட்சை எழுதுவதிலும் நாட்டமில்லை. அப்போதுதான் இலங்கை வங்கி வைத்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று முகாமைத்துவ உதவியாளராகப் பணி நியமனம் பெற்றாள்.

காசாளராக இருந்து படிப்படியாக முன்னேறி இன்று அந்தக் கிளையின் உதவி முகாமையாளராகப் பணி புரிகிறாள். அன்று நகை அடைவில் வேலை செய்யும் உத்தியோகத்தர் வரவில்லை எனவும் இவள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருந்தாள். பொதுவாக இவளது வேலை, மற்றவர்களது வேலைகளை மேற்பார்வை செய்து அன்றன்று கணக்கு வழக்கோடு அறிக்கை சமர்ப்பிப்பதே. யாராவது வராதவிடத்து அவர்களது வேலைகளை இன்று போல் பார்ப்பதுமுண்டு.

சங்கிலியைத் தேய்த்த இடத்தில் உரைகல்லில் ஒரு சொட்டு சல்பூரிக் அமிலத்தை விட்டாள். தங்கத்தின் நிறத்தில் எந்த வித மாற்றமும் காட்டவில்லை என்பதை அவதானித்த படியே அதன் மீது ஒரு சொட்டு உப்புக் கரைசலையும் விட்டாள். இப்போது சற்று நிறம் மங்கியது.

'உங்களில நம்பிக்கை இல்லாமல் இல்லையம்மா. இருந்தாலும் எங்கட கடமையை நாங்கள் சரியாகச் செய்யத் தானே வேணும்? தேய்ச்சுப் பார்த்தால் தானே எத்தனை கரட் என்று தெரியுமம்மா?'

சரளமாகச் சிங்களத்தில் உரையாடியபடியே வேலையைத் தொடர்ந்தாள்.

'அதெல்லாம் சுத்தத் தங்கம் அம்மா. எல்லாம் இருபத்திநாலு கரட் என்று கொழும்பில இருந்து என்ர மனுசன் வாங்கி வந்தது...'

வைஷாலி மெதுவாய்த் தனக்குள் சிரித்துக் கொண்டாள். நகை செய்பவர்கள் எளியவர்களை ஏதாவது சொல்லி ஏமாற்றி விடுவார்கள். உண்மையில் அந்தச் சங்கிலி பதினெட்டுக் கரட்தான். பொதுவாக இருபத்துநாலு கரட்டில் நகைகள் செய்வது இல்லை. தங்க பிஸ்கட்டுகள்தான் இருபத்து நாலில் இருக்கும். நகைகள் தரமானவை அதிகம் இருபத்தியிரெண்டு கரட்டில்தான் செய்யப்படும்.

உண்மையைச் சொல்லி அந்தப் பெண்மணியின் மனதை நோகடிக்க விரும்பாதவளாய், அவர் கேட்ட தொகை நகைப் பெறுமதியை விடக் குறைவாகவும் இருக்க, எந்த வித வாக்குவாதமும் இல்லாமல் கொடுத்து அனுப்பி விட்டு அடுத்த நபரைக் கவனிக்க ஆயத்தமானாள்.

மதியம் தாண்டிக் கொண்டிருந்தது. திங்கள் கிழமை என்பதால் கூட்டம் அதிகம். சின்ன இடைவேளை கூட எடுக்க முடியாமல் வாடிக்கையாளரைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது, காலையில் வெறும் தேநீர் மட்டுமே அருந்தியிருக்க, வயிறு கபகப என்றது. இந்த நபரை முடித்துக் கொண்டு சாப்பிடச் செல்வோம் என்று எண்ணியவாறு வேலையைத் தொடர்ந்தாள்.

'மகே ரத்தரங் ரிக டென்ன... (நகையைத் தாங்கோ)'

வந்தவரிடம் கேட்டவாறே பணத்தை எண்ணிக் கட்டிக் கொண்டிருந்தாள்.

'வைஷூ....!'

இந்த மலையக நகரில் யார் தன் பெயரின் செல்லச் சுருக்கம் கூறிக் கூப்பிடுவது என்று அதிசயித்தவளாய் தனக்கு முன்னே அமர்ந்திருந்த நபரை உற்று நோக்கினாள் வைஷாலி.

கண்கள், மூக்கு, வாய் தவிர்த்து அங்கே முகம் என்ற இடத்தில் ரோமக்காடு தானிருந்தது. அதற்குள் எப்படிக் கண்டுபிடிப்பது இது யாரென்று? இவள் எதுவும் பேசாது ஆராய்ச்சியும் கேள்வியுமாய் அவனை நோக்கினாள்.

அவனோ அதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்டவனாய், அவள் விழிகளைத் தவிர்த்து மேசை மீது ஒரு கைச்சங்கிலியையும் மோதிரத்தையும் வைத்தவன்,

'இரண்டுக்கும் சேர்த்து எனக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வேணும். ரெண்டையும் தனித்தனி ரிசீட் போட வேணும்.'

என்று சிங்களத்தில் சொன்னான். வைஷாலிக்கு அவன் 'வைஷூ' என்று கூப்பிட்டதே பிரமையோ என்ற எண்ணம் தோன்ற, அந்த சந்தேகத்தைப் பின் தள்ளி கருமமே கண்ணாய்ப் பணியைக் கவனித்தாள். அவனும் அதன் பிறகு எதுவுமே பேசாது நகைக்குரிய பணத்தைப் பெற்றுச் சென்றுவிட்டான்.

ஆள் அதிகம் உயரமெல்லாம் இல்லை. கறுப்பு நிறத்தில் தான் சேர்த்தி. அகன்ற தோளோடு உயரத்திற்கேற்ற உடம்பாய் ஆஜானுபாகுவாய்த் தான் இருந்தான். ஆனால், அந்த அழைப்பும் பிரமை இல்லை எனும் விதமாக அவன் குரல் எங்கேயோ கேட்ட குரல் போலப் பரிச்சயமானதாகத் தோன்றியது.

இந்த மலையகப் பிரதேசத்தில் என்னைத் தெரிந்தவர்கள் யார் இருக்கப் போகிறார்கள்? என்று யோசித்தவாறே, அவசரமாக அவனது நகைக்குரிய சீட்டைப் பார்வையிட்டாள்.

வழக்கமான வாடிக்கையாளர் என்றால் அவரது அடையாள அட்டை இலக்கத்தை மட்டும் கணணியில் பதிந்தால் போதும், மற்றைய விபரங்கள் எல்லாம் தானாகவே அச்சிலேறும். இவனும் இங்கே வாடிக்கையாளன் போல. அடையாள அட்டை இலக்கத்தைக் கொடுத்ததும் விபரங்கள் வந்து விடவே, இவள் பசிக் கொடுமையில் வேறொன்றையும் கவனிக்காது, பற்றுச் சீட்டையும் பணத்தையும் வழங்கியிருந்தாள். அவனும் அமைதியாகவே பணத்தை வாங்கிச் சென்றிருந்தான்.

சஞ்சயன் என்ற பெயரைப் பார்த்தவள், மளமளவென கணணித் திரையில் அவனின் மீதி விபரங்களை ஆராய்ந்தாள். அவளின் சந்தேகம் சரியே என்பது போல அது அவனே தான். பிறந்த ஆண்டும், பிறந்த இடமும் ஐயமறத் தெளிவுபடுத்தியது.

அவனது தொலைபேசி எண்ணைத் தனது கைப்பேசியில் பதித்தவள், அவனுக்கு அழைப்பெடுக்க எண்ணி விட்டுத் தன் தலையில் தானே குட்டிக் கொண்டவள், பசி தன் வேலையைக் காட்டவும் பணம் வைத்திருந்த பெட்டகத்தைப் பூட்டிக் கொண்டு ஓய்வறையை நோக்கிச் சென்றாள்.

உண்ணும் போதும் ஏனோ அவன் ஞாபகமே மையம் கொண்டது. ஏறத்தாழ எட்டு வருடங்களுக்கு மேலாகியிருந்தது அவனைப் பார்த்து. கடைசியாக உயர்தரப் பரீட்சைகள் முடிவடைந்த நேரம் பார்த்தது. அதன் பின்னர் அவள் வாழ்வு சுனாமியாய் சுழற்றியடித்ததில் இப்படியொரு ஜீவன் இந்த உலகத்தில் உயிர் வாழ்வதையே அவள் மறந்திருந்தாள். மறந்திருந்தாள் என்பதை விட மறக்க விரும்பினாள் என்பதே பொருந்தும்.

அவனோடு பேச வேண்டும் போன்றதொரு ஆர்வமும் ஆசையும் உந்தித் தள்ளினாலும் அவளது ஈகோ அவனுக்கு அழைப்பெடுக்க இடம் கொடுக்கவில்லை. அவன் 'வைஷூ' என்று கூப்பிட்டது நிஜம் என்பது புரிந்தவள், பின்னர் எதற்காக அவன் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை என்பது புரியாமல் தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் என்ற நிலையில் இருந்தாள்.

இந்த ஐந்து வருடங்களாக, பெற்றவர், உற்றவர்கள் அனைவரையும் விட்டு விலகி, சொந்த ஊரை விட்டு ஓடி வந்து பாதிக்குப் பாதி சிங்களவர் வாழும் இந்தப் புது இடத்தில், மொழி புரியாத ஊரில் தனியாகத் தனது வாழ்க்கையைக் கட்டியெழுப்பி நிமிர்வாகவே வாழ்ந்து கொண்டிருந்தாலும் பழைய ஞாபகங்கள் வந்து அடிக்கடி இவளை சுருட்டிப் போடாமலில்லை.

தலவாக்கலை இலங்கையில் மத்திய மாகாணத்தில் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். சிங்களவர்களும் தமிழர்களும் சரிக்குச் சமமாக ஒற்றுமையாக வாழும் ஒரு பிரதேசம்.


இருந்தாலும் கூட வைஷாலியின் துரதிர்ஷ்டம் அவள் பணி புரியும் கிளையில் இவள் ஒருத்தி தான் தமிழ்ப்பெண். சிங்களம், எழுத வாசிக்க பாடசாலையிலேயே ஓரளவு படித்திருந்ததில் கூட வேலை செய்பவர்களோடு பேசிப் பழகியதில் விரைவிலேயே சரளமாகப் பேச ஆரம்பித்து விட்டாள்.

வங்கிக்கு வரும் வாடிக்கையாளர்கள் இவளையும் சிங்களத்தி என்று எண்ணி சிங்களத்தில் பேசுமளவுக்கு இவள் நடை, உடை, பாவனையும் சிங்களவர் போலவே விரைவில் மாறி விட்டது. இவளது நண்பர்கள் பெரும்பாலும் வங்கியில் கூட வேலை செய்பவர்கள்தான். மற்றையபடி அங்கிருந்த வைத்தியசாலையில் வேலை பார்க்கும் கண்டியைச் சேர்ந்த வைத்தியர் அதுல்யா மட்டும் தான் இந்த ஊரில் இவளுக்கிருக்கும் ஒரேயொரு தமிழ் நட்பு. (தொடரும்...)

**"உண்ணும் போதும் ஏனோ அவன் ஞாபகமே மையம் கொண்டது. ஏறத்தாழ எட்டு வருடங்களுக்கு மேலாகியிருந்தது அவனைப் பார்த்து. கடைசியாக உயர்தரப் பரீட்சைகள் முடிவடைந்த நேரம் பார்த்தது. அதன் பின்னர் அவள் வாழ்வு சுனாமியாய் சுழற்றியடித்ததில் இப்படியொரு ஜீவன் இந்த உலகத்தில் உயிர் வாழ்வதையே அவள் மறந்திருந்தாள். மறந்திருந்தாள் என்பதை விட மறக்க விரும்பினாள் என்பதே பொருந்தும்."**

# இந்திய–ரஷ்ய மூலோபாய நட்புறவை மீள உறுதி செய்கிறதா புடின்–மோடி சந்திப்பு?

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பான பிரச்சினைகள் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களிடையேயும் விவாதிக்கப்பட்டது. இறுதியில் கூட்டறிக்கையில் தலைவர்கள் சுமுக மான, அமைதியான, பாதுகாப்பான மற்றும் நிலையான ஆப்கானிஸ்தானுக்கு வலுவான ஆதரவை மீண்டும் வலியுறுத்தினர். அதே நேரத்தில் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு மரியாதை மற்றும் அதன் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது. தற்போதைய மனிதாபிமான நிலைமை குறித்தும் அவர்கள் விவாதித்து, ஆப்கானிஸ்தான் மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகளை வழங்க முடிவு செய்தனர்.



கானா நாட்டு இராஜதந்திரியான கோஜோ டெப்ரா மாநாட்டு இராஜதந்திரம் பற்றி குறிப்பிடுகையில், “வானொலி” மக்கள் எல்லாத் தீமைகளையும் கேட்கவும் “தொலைக்காட்சி” அவர்கள் எல்லா தீமைகளையும் பார்க்கவும் உதவுகிறது. மேலும் ஜெட் விமானம் அவர்கள் வெளியேறி எல்லா தீமைகளையும் செய்ய உதவுகிறது” எனச்சுட்டிக்காட்டியுள்ளார். இங்கு தீமை என்பது பிறரையே சாருகிறது. குறித்த தேசத்துக்கு தேசிய நலனாகவே அமைகிறது. அவ்வாறான இராஜதந்திரத்தில் தனது தேர்ச்சியை மீளவுமொரு தடவை ரஷ்ய-இந்திய 2021 ஆம் ஆண்டு உச்சி மாநாட்டில் புடின் உறுதி செய்துள்ளார். குறித்த உச்சி மாநாட்டில் இந்தியாவின் பங்களிப்புடன் ரஷ்யாவின் எதிர்பார்ப்புக்களே அதிகம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய-அமெரிக்க பங்காளித்துவத்தைத் தாண்டிய நெருக்கம் இந்திய-ரஷ்ய உறவில் காணப்படுகின்றது என்ற செய்தியையும் வெளிப்படுத்தியுள்ளது. இது சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குனர் சி.ராஜா மோகன் குறிப்பிடுவதைப் போன்று, “வாஷிங்டனுடன் நட்பாக இருப்பது புதுடில்லி மாஸ்கோவுடன் முக்கியமான உறவுகளைப் பேண முடியாது என்று அர்த்தமல்ல. இந்தியாவும் ரஷ்யாவும் தங்கள் உறவை உறுதியாக நிலைநிறுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்துள்ளன. மற்ற உலகங்கள் விரும்பாத சமயங்களில் ஒருவருக்கொருவர் நிலைத்து நிற்கின்றன. தலைமைகளை மாற்றினாலும், பெரும்பாலும் நிலையான வெளியுறவுக் கொள்கைகளைப் பேணுகின்றன.” என்பதுவே மீளவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ■



# ஆரோக்கிய துவாய்களுக்கான வரி விலக்கு மாதவிடாய் வறுமை ஒழிப்புக்கான அடித்தளமாக அமையும்...



(05ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாதவிடாய் வறுமை காரணமாக துணிகளை பயன்படுத்துவதில் பெண்களுக்கு பல்வேறு உடல், உள ரீதியான பிரச்சினைகள் காணப் படுவதை போன்று ஆரோக்கிய துவாய்களை (நப்கின்) பொருத்தமான முறையில் பயன்படுத்தாத பட்சத்தில் அவை சுற்றுச் சூழலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

அதாவது பயன்படுத்திய பின்னர் அப்புறப்படுத்தப்படும் ஆரோக்கிய துவாய்கள் குப்பைக் கிடங்குகளுக்குச் சென்றடையும். குப்பைக் கிடங்குகளில் அவை 800 டிகிரி செல்சியஸில் நான்கு முதல் ஐந்து நிமிடங் களுக்கு தொடர்ச்சியாக எரிக்கப்பட்ட பிறகு, மண்ணைச் சென்றடையும். முறையாக எரிக்கப்படவில்லையெனில், முழுமையாக மக்காது. மண்ணை நஞ்சாக்கும், இப்படி எரியாமலிருக்கும் ஆரோக்கிய துவாய்களில் உள்ள இரசாயனங்கள், காற்றில் கொஞ்சம் கொஞ்சமாகத் தனது விஷத்தை கலக்கத் தொடங்கும். மேலும் ஆரோக்கிய துவாய்களின் உள்ளே இருக்கும் பிளாஸ்டிக் அடுக்குகள், மண்ணிலிருந்து முற்றிலுமாக மறைய 500 முதல் 800 வருடங்கள் ஆகலாம். முறையாக எரிக்கப்படும் போதும், ஆரோக்கிய துவாய்களில் உள்ள இரசாயனங்கள் காற்றில் கலந்து அதன் நச்சுத் தன்மையை வெளியேற்றும். அதுவும் சுற்றுச்சூழலுக்கு மிகப்பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் குப்பைக் கிடங்குகளில் பணி புரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் தொற்று பாதிப்புகள் ஏற்படும். எனவே மாதவிடாய் காலப்பகுதியில் ஆரோக்கிய துவாய்களை முறையாகப் பயன்படுத்த வேண்டியதும் கவனத்தில் கொள்ள வேண்டியது விடயமாகும்.

ஆரோக்கிய துவாய்களை இலவசமாக வழங்கும் முதல் நாடாக ஸ்கொட்லாந்து இருக்கிறது. உள்நாட்டு யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், தீவிரவாத தாக்குதல்கள், ஊழல் போன்ற விடயங்கள் இலங்கையின் பொருளாதாரத்தை காலங்காலமாக வெகுவாகப் பாதித்திருக்கின்ற நிலையில் ஆரோக்கிய துவாய்களை இலவசமாக வழங்குவது பற்றி அரசாங்கம் சிந்திக்குமா? என்பது பற்றி தெரியவில்லை. ஆனால் துவாய்களுக்கான அதிகளவான வரியை இல்லாமல் செய்வது இம் மாதவிடாய் வறுமை ஒழிப்புக்கு ஓர் அடித்த ளமாக அமையும். ■

# பாகிஸ்தானில் கொல்லப்பட்ட இலங்கையர்!

# கண்துடைப்பு மாத்திரம் பரிகாரமா...?

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
இது இவ்விதமிருக்க, இலங்கை தமது பாகிஸ்தானுக்கு இதுவரையில் 35 ஆயிரம் கண்களை தானம் செய்திருக்கிறது. ஆனால், நாம்தான் பார்வையை இழந்து விட்டோம் என்று அந்த நாட்டின் விசேட கண் சிகிச்சை நிபுணர் மருத்துவர் நியாஜ் புரோகி என்பவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இந்தச்செய்திகள் யாவும் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கும் உறவினர்கள், நண்பர்களுக்கும் சொல்லப்படும் தேறுதல் வார்த்தைகள் மாத்திரம்தான். இதனால், பிரியந்த குமார மீண்டும் எழுந்து வந்து விடமாட்டார்!

சில வருடங்களுக்கு முன்னர் மத்தியகிழக்கில் சவூதி அரேபியாவில் அங்குள்ள சட்டத்தின் பிரகாரம் மரண தண்டனை விதிக்கப்பட்டு கொல்லப்பட்ட கிழக்கிலங்கை யுவதி ரிஸானா நஃபீக் என்பவரது சடலம் நாடு திரும்பிய வேளையிலும் அரசியல்வாதிகள் பலர் அவரின் வீட்டுக்குச்சென்று தேறுதல்கூறினர்.

இத்தகைய கண்துடைப்புச் சம்பவங்கள்தான் தற்போது பிரியந்த குமாரவின் விடயத்திலும் நடக்கிறது.

இந்நிலையில் பாகிஸ்தானில் பணியாற்றும் இலங்கையர்களை மீண்டும் தாயகத்திற்கு அழைத்துவிடல் வேண்டும் என்ற குரலும் ஒலிக்கத்தொடங்கிவிட்டது.

தன்னால் முடிந்தவரையில் போராடி பிரியந்த குமாரவைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்த மலிக் அதான் என்ற மனிதாபிமானிக்குப் பாகிஸ்தானின் உயர் விருது வழங்கப்படவிருப்பதாக பிரதமர் இம்ரான் கான் அறிவித்துள்ளார்.

இத்தகைய மனிதாபிமானிகள் உலகில் சிறுபான்மையினரே. 1983 இல் இலங்கையில் கலவரம் நடந்த போது, பல பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த மனிதாபிமானிகள் தமிழர்களைக் காப்பாற்றியுள்ளனர்.

அடிப்படை மதவாதம், இனவாதம் என்பன இறுதியில் கொலையுணர்ச்சிக்கே தள்ளிவிடும் என்பதற்கு சியால்கோட் சம்பவம், மற்றும் ஒரு உதாரணம்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மீண்டும் தலையெடுத்துள்ளமையால், அண்டை நாடுகளிலும் இஸ்லாமிய அடிப்படைவாதம் பயங்கரவாதமாக மாறிவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அரசியல் விமர்சகர்கள் கூறத்தொடங்கிவிட்டனர்.



அதே சமயம் சியல்கோட் சம்பவம் குறித்து பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர், பர்வேஸ் கட்டாக் தெரிவித்துள்ள கருத்து அதிர்ச்சியைத் தருகிறது.

பிரியந்த குமார தெய்வநிந்தனை செய்தமையால், இஸ்லாத்தில் தீவிர நம்பிக்கை கொண்ட இளைஞர்கள் அவ்வாறு நடந்துகொண்டனர் என்றும், கருத்துச் சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருப்பதாகவும், நடந்துள்ள சம்பவம் பொதுவானது எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், அவர் அங்கம் வகிக்கும் அரசின் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் நடந்த சம்பவத்தைக் கண்டிக்கின்றர். இலங்கையிடம் வருத்தம் தெரிவிக்கின்றனர். இந்தப்பின்னணிகளைப் பார்க்கும்போது, பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் கடும்போக்குள்ள இஸ்லாமிய அடிப்படை வாதியா..? என்ற சந்தேகம் எழுகின்றது.

அவ்வாறாயின் பாகிஸ்தானுக்கு பணி நிமித்தம் சென்றிருப்பவர்கள், செல்லவிருப்பவர்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சரே அத்தகைய நிலைப்பாட்டுடன் இருந்தால், பாகிஸ்தானின் அயலுறவுக்கொள்கை எவ்வாறு அமையும் என்ற சந்தேகங்கள் எழும்!

எனினும், கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்ற பிரதமர் இம்ரான்கானின் உறுதிமொழி காப்பாற்றப்படுமா..? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தற்போது, பிரியந்த குமாரவின் விவகாரம் ஊடகங்களில் பெரிதாகப்பேசப்பட்டாலும், இதனைவிட வேறு ஒரு பிரச்சினை பூதாகரமாகிவிட்டால், இதனை மக்கள் மறந்துவிட்டு புதிய பிரச்சினையை பேசுபொருளாக்குவார்கள். இதற்கு முன்னர், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதீனின் வீட்டில் வேலையாளாகப் பணியாற்றிய மலையக யுவதியின் மரணம் தொடர்பான செய்தி மக்கள் மத்தியில் தற்போது அடங்கிப்போயிருப்பது போன்று பிரியந்த குமாரவின் கொலைச்செய்தியும் அடங்கி விடலாம்.

அரசு இதுபோன்ற சம்பவங்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நடக்கும்போது கண்துடைப்பு அறிக்கைகளை மாத்திரம் வெளியிடாமல். வருமுன் காக்கும் நடவடிக்கைகளை பலப்படுத்திவைத்திருத்தல் வேண்டும். ■







# பீஜிங் ஒலிம்பிக்குக்கு இராஜதந்திர ரீதியிலான புறக்கணிப்பு

பீஜிங்கில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக்கை புறக்கணிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. வடமேற்கு ஜின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் முஸ்லிம்களுக்கு எதிராக "இனப்படுகொலை" செய்ததாக குற்றம் சாட்டிய ஒரு நாடு அடுத்த ஆண்டு பெப்ரவரியில் நடத்தும் விளையாட்டுப் போட்டிகளில் என்ன நிலைப்பாட்டை எடுப்பது என்று வாஷிங்டன் பல மாதங்கள் போராடியதைத் தொடர்ந்து இந்த முடிவு வந்துள்ளது. பீஜிங்கில் இருந்து உடனடி எதிர்வினை எதுவும் இல்லை, ஆனால் திங்களன்று முன்னதாக சீன வெளியுறவு அமைச்சகம் அத்தகைய புறக்கணிப்பு செயல்படுத்தப்பட்டால் "உறுதியான எதிர் நடவடிக்கைகள்" என்று அச்சுறுத்தியது. அமெரிக்க வீரர்கள் பீஜிங் ஒலிம்பிக்கில் கலந்துகொள்ளமாட்டார்கள். அமெரிக்காவைத் தொடர்ந்து பிரிட்டன், அவுஸ்திரேலியா கனடா ஆகியனவும் இராஜதந்திர புறக்கனிப்பை அறிவித்துள்ளன.

சின்ஜியாங்கில் உள்ள முகாம்களில் குறைந்தது ஒரு மில்லியன் உய்குர்களும் பிற துருக்கிய மொழி பேசும் பெரும்பாலான முஸ்லீம் சிறுபான்மையினரும் சிறை வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அங்கு பெண்களை வலுக்கட்டாயமாக கருத்தடை செய்ததாகவும் கட்டாய உழைப்பை திணிப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவின் தலைவரான பாப் மெனெண் டஸ், "சின்ஜியாங்கில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இனப்படுகொலைப் பிரச்சாரத்தின் சக்தி வாய்ந்த கண்டனம்" என்று அவர் அழைத்த முடிவை வரவேற்றார். "இந்த இராஜதந்திர புறக்கணிப்பில் அமெரிக்காவுடன் சேருமாறு நமது மதிப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் மற்ற நட்பு நாடுகள் மற்றும் பங்காளிகளுக்கு" அவர் அழைப்பு விடுத்தார். மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த முடிவை "முக்கியமானது" என்று கூறியது, ஆனால் "இந்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்கு நீதி" அதிக பொறுப்புக்கூறலை வலியுறுத்தியது. திங்களன்று முன்னதாக, சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் விளையாட்டு "அரசியல் காட்டி மற்றும் கையாளுதலுக்கான ஒரு மேடை அல்ல" என்று எச்சரித்தார். "பிடென் நிர்வாகம் பெய்ஜிங் 2022 குளிர்கால ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டுகளுக்கு எந்த தூதரக அல்லது அதிகாரப்பூர்வ பிரதிநிதித்துவத்தையும் அனுப்பாது, ஜமக்கள் சீனக் குடியரசின்ஸ நடந்து கொண்டிருக்கும் இனப்படுகொலை மற்றும் சின்ஜியாங்கில் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு," வெள்ளை மாளிகையின் செய்தி செயலாளர் ஜென் சாகி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மனித உரிமைகள் கவலைகள் காரணமாக இராஜ தந்திர புறக்கணிப்பில் அமெரிக்கா, இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஆகியவற்றுடன் கனடாவும் இணையும் என்று என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ புதன் கிழமை தெரிவித்தார்.

பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இராஜதந்திரரீதியில் புறக்கணிக்கப்போவதாக அமெரிக்கா அறித்தது. அமெரிக்காவைப் பின்பற்றி அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளும் பீஜிங் ஒலிம்பிக்கைப் புறக் கணிக்கப்போவதாக அறிவித்தன. இந்தப் பட்டியலில் மேலும் பல நாடுகள் இணையும் என சீனா அஞ்சுகிறது. மேலும் பல நாடுகள் இதேபோன்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். "சீனாவிற்கு ஒரு வலுவான சமிக்ஞையை அனுப்புவது முக்கியம்," "மனித உரிமை மீறல்களை ஏற்றுக்கொள்ள முடியாது." என கனேடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி கூறினார்.

கனடா, அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியாவின் இராஜதந்திர நகர்வுகள் விளையாட்டுகளில் போட்டியிடும் விளையாட்டு வீரர்களின் திறனை பாதிக்காது.

வடமேற்கு ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்குர் சிறுபான்மையினருக்கு எதிராக சீன மனித உரிமை மீறல்களை மேற்கோள் காட்டி, பெய்ஜிங் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளை முழுவதுமாக புறக்கணிக்க உரிமைக் குழுக்கள் அழைப்பு விடுத்துள்ளன, சிலர் இதை இனப்படுகொலை என்று அழைத்தனர். ஹொங்கொங்கில் ஜனநாயகப் போராட்டங்களை பெய்ஜிங் நசுக்குவதையும், அரை-தன்னாட்சி பிரதேசத்தில் அதிருப்திக்கு எதிரான கடுமையான ஒடுக்குமுறையையும் அவை சுட்டிக்காட்டுகின்றன. ●

# முடிவுக்கு வருகிறது கோலியின் சகாப்தம்

இந்திய கிரிக்கெட் ரி20 அணிக் கப்டன் பதவியில் இருந்து விலகிய கோலி டெஸ்ட். , 50 ஓவர் அணிக் கப்டனாகத் தொடர்ந்தார். தென். ஆபிரிக்காவுக்குச் செல்லும் 50 ஓவர் அணி கப்டனாக ரோகித் சர்மாவை புதன்கிழமை இரவு இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது. இதனால் கோலியின் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்திய அணியில் கோலியின் கை ஓங்கி இருந்தபோது பொறுமை காத்த ரோகித்துக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. ரி20, ஒரு நாள் ஆகிய இரண்டு அணிகளுக்கும் அவர் கப்டனாக இருக்கிறார். டெஸ் தலைமையும் ரோகித்தைத் தேடி வரும் என அவரது ரசிகர்கள் நம்புகிறார்கள்.

இந்தியா, நியூசிலாந்து அணிக்கு எதிரான தொடர் முடிவடைந்ததை அடுத்து தற்போது தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. விராத் கோலியின் தலைமையின் கீழ் 18 பேர் கொண்ட அணி தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட நிலையில் அடுத்ததாக விராட் கோலி ஒரு நாள் கப்டன் பதவியில் இருந்து நீக்கப்படுகிறார் என்றும் அவருக்கு பதிலாக ரோகித் சர்மாகப்டனாக செயல்பட இருக்கிறார் என்றும் பிசிசிஐ அதிர்ச்சியான ஒரு அறிவிப்பை வெளியிட்டது.




இது விராட் கோலி ரசிகர்களுக்கு மிகப் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தும் விடயமாக மாறியது. ஏனெனில் ஒருநாள் கிரிக்கெட்டில் மிக சிறப்பான கப்டனாக அவரை திடீரென கஸ்டன் பதவியில் தூக்கியதற்கு என்ன காரணம் ? என்று பலரும் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில் பிசிசிஐக்கும் விராட் கோலி க்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டுள்ளதாக தற்போது தகவல் வெளியாகி உள்ளது. ரி20 மற்றும் ஒருநாள் போட்டிக்கு தனித்தனி கப்டன் இருப்பதை பி.சி.சி.ஐ விரும்பவில்லையாம். இதன் காரணமாக ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து தானாக முன்வந்து பதவி விலகுமாறு விராட் கோலியை பிசிசிஐ கேட்டுக் கொண்டது. ஆனால் கோலி அதற்கு சம்மதிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.


2023ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி வரை அணியின் கப்டனாக இருந்து 50 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்று கொடுப்பேன் என்று கோலி கூறியுள்ளார். ஆனால் பி.சி.சி.ஐ யின் அதிகாரிகள் எவ்வளவு பேசியும் சமாதானம் ஆகவில்லை. இதனால் இரு தரப்புக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் பிசிசிஐ அதிகாரிகள் விராட் கோலி பதவி விலக 48 மணி நேரம் கெடு விதித்தனர்.



அந்த 48 மணி நேரத்தில் பதவி விலகவில்லை என்றால் பதவியில் இருந்து நீக்கப்படுவீர்கள் என்று பி.சி.சி.ஐ எச்சரித்ததாக கூறப்படுகிறது. மேலும் தான் எடுத்த முடிவிலிருந்து மாறாத கோலி பதவி விலகாததால் அவரை கப்டன் பதவியிலிருந்து பி.சி.சி.ஐ நீக்கி உள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. விராட் கோலியின் தலைமையில் இந்திய அணி 95 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 65 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ரி 20 கிரிக்கெட் துணைக்கேப்டனாக இருக்கும் கே.எல்.ராகுல் ஒருநாள் போட்டிகளுக்கான அணிக்கும் துணை கப்டனாக செயல்படுவார் என்று தெரிகிறது. ரோஹித்துக்கு பிறகு கேஎல் ராகுல் அணியின் கப்டனாக நியமனமாவதற்கு அதிக வாய்ப்பு உள்ளதால் அவரே துணை - ஆட்வெர்டிசெ மென்ட் 29 வயதில் இருக்கும் ராகுல் இன்னும் ஆறு ஏழு ஆண்டுகள் தொடர்ந்து விளையாடுவார் என்பதனால் அவரை துணை கப்டனாக மாற்ற பிசிசிஐ முடிவு செய்துள்ளது. இது குறித்தான அறிவிப்பும், தென்னாப்பிரிக்க தொடருக்கான ஒருநாள் அணியும் ஒரே நேரத்தில் வெளியாகும் என்றும் தெரிகிறது. ●

# கையில் பளிச்சிடும் கொழுப்பின் அளவு



இதயக் கோளாறு உள்ளோருக்கு, இரத்தத்தில் கொழுப்பின் அளவை அடிக்கடி சோதிக்க வேண்டும். இதற்கு, ஊசி வாயிலாக இரத்த மாதிரி எடுப்பதுதான் ஒரே வழி. ஆனால், ஊசியில்லாத ஒரு முறையைச் சீனாவிலுள்ள, சீன அறிவியல் அக்கடமி மற்றும் சீன அறிவியல் தொழில்நுட்ப பல்கலைக் கழகம் ஆகிய வற்றை சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இந்த முறையின்படி, நோயாளி அதிகம் பயன்படுத்தாத கரத்தின், சிறுவிரல் உட்பகுதியை ஸ்கான் செய்ய வேண்டும். ஏன் அதிகம் புழங்காத கரம்? அதன் உள்ளங்கை புறம்தான் மென்மையாக, ஒளியை அதிகம் கடத்தும் விதத்தில் இருக்கும்.

சிறுவிரலுக்கு அருகே, ஒரு வளையத்தை வைத்து, அதனுள் ஒரு வேதிப்பொருளை ஊற்றுவர். பின், அந்த வளையப் பகுதியை நுண்ணோக்கி ஸ்கானர் வாயிலாக, ஒளியைச் செலுத்தி சோதிப்பர்.

வேதிப்பொருள், தோலின் மேல் சுரக்கும் எண்ணெயிலுள்ள கொலஸ்ட்ராலுடன் வினைபுரியக் கூடியது. எனவே, கொழுப்பின் அளவைப் பொறுத்து ஒளிச்சிதறல் விகிதம் மாறுபடும். அதை வைத்து, நோயாளிக்கு கொழுப்பு ஆபத்தான அளவில் உள்ளதா? இல்லையா என உடனே அறிய முடியும். இரத்த மாதிரியை எடுத்துச் சென்று, ஆய்வகத்தில் சோதித்து, கொழுப்பின் அளவை அறிவதில் உள்ள தாமதம் இனி இருக்காது.




# மந்திர மீன்



ஒரு ஊரில் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தனர். அவரின் மனைவி அகங்காரம் கொண்டவள். கணவன் மீன் பிடித்தொழில் செய்து வந்தான். ஒரு நாள் வழமை போலவே அவர் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றார். அவர் கடலினுள் வலையை வீசி மீன்பிடிக்க முயலும் போது வலையினுள் ஒரு மந்திர மீன் மாட்டியது. அது என்னை விட்டு விடுங்கள் என்று மீன் கூறியது. நான் உங்களுக்கு உதவ வேண்டுமா? என்று கேட்டது. அதற்கு மீனவன் ஆம் என்று பதிலளித்தார். மீன் கேட்டது, என்ன வேண்டும்? என்று. மீனவன் கூறினார் எனது மனைவி அகங்காரத்தில் இருந்து விடுபட வேண்டும், என்னோடு அன்பாகப் பேச வேண்டும் என்று மீன் சொன்னது உன் வீடு சென்று பார் என்று கூறியது. அவர் வீடு சென்றார். அவரது மனைவி அவரோடு அன்பாகப் பேசினாள் அதனால் அவர் மகிழ்ந்து மனைவியோடு வாழ்ந்தார்.

**உ.லக்சிகா**
தரம் - 05
யா/வேதாரணியேஸ்வர
வித்தியாலயம்

நீ என்னைப் பத்து மாதம்
சுமத்து பெற்றெடுத்தாய்
எனக்கு விருப்பமானவற்றை
வேண்டித் தந்தாய் - நான்
நல்ல விடயங்களை செய்தால்
என்னைப் பாராட்டினாய்
என்னை நீ முயற்சி செய்...
முயற்சி செய்...
எனத் தட்டிக் கொடுத்தாய்
அதனால் உனக்காக வாழ
நினைக்கிறேன் தாயே...!

**க.கவிஷ்னா**




## பிள்ளைகளே! உங்கள் கைவண்ணத்தை எங்களுக்கு அனுப்புங்கள்




**சு.சாருஜன்**
**தரம் - 05**
**யா/குடத்தனை அ.த.க.**
**பாடசாலை**






**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564



# பசுமைக் குடில் பணி செய்யும் 'ரோபோ'



அமெரிக்காவில் நவீன விவசாயம் உயர்தொழில்நுட்ப, தொழிற்சாலை பாணியில் நடக்கிறது. இதற்கென, மனித பணியாளர்களுக்குப் பதிலாக ரோபோக்களைத் தயாரித்து தருகிறது 'அயர்ன் ஆக்ஸ்'. இது தயாரிக்கும் குரோவர் என்ற தட்டை வடிவ ரோபோவை, வடக்கு கலிபோர்னியா, டெக்சாஸ் போன்ற மாநிலங்களில் உள்ள உயர்தொழில்நுட்ப பசுமைக் குடில்களை நடத்துபவர் ஆர்வமுடன் வாங்குகின்றனர்.

தட்டையாக, சதுரமாக உள்ள இந்த ரோபோவின் சக்கரங்கள் தனித்தனியே இயங்கும் திறன் கொண்டவை. குரோவர் ரோபோவால் 445 கிலோ எடைவரை தூக்கிக்கொண்டு வேகமாக நகர முடியும். இந்த ரோபோ தானாக முடிவெடுத்து இயங்கும், என்பதோடு இட்ட கட்டளைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றும். இந்த ரோபோ எதன் மீதும் மோதாமல் இருக்க, லிடார் என்ற உணரிக் கருவிகளும், பல கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

பசுமைக் குடில்களில், நான்கு கால் கொண்ட மேசை மீது, பெரிய தட்டுக்களில் காய்கறி மற்றும் பழச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. அந்த மேசையின் அடியே சென்று குரோவர் ரோபோ அப்படியே தூக்கி, அதிக ஓசையின்றி, வெகு தொலைவிலுள்ள சோதனைக் கூடத்திற்குக் கொண்டு வருகிறது.

அங்குள்ள கணிப்பொறி கமராக்கள், விளையும் தாவரங்களின் ஊட்டச் சத்து, விளைச்சல், பூச்சித் தாக்கம் போன்றவற்றைச் சில நொடிகளில் சோதித்து விடும். பின் சோதித்த செடி மேசையை குரோவர் ரோபோ இருந்த இடத்திலேயே கொண்டு போய் வைத்துவிடும். இப்படி, இராப்பகலாகக் குரோவர் ரோபோவால் வேலை செய்ய முடிவதால், பசுமைக் குடில்கள் அசல் பயிர் தொழிற்சாலைகளாக மாறியிருக்கின்றன.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 11.12.2021 அன்று வெளியிடப்பட்டது.